
# 2

## மு.கருணாநிதி

முரசு 1 | சென்னை | 11—3—55 | வெள்ளி | ஒலி 50



முல்லை நிலத்து ஆய்ச்சியர்களை நிகர்த்த பேச்சுக்காரிகள். கலாப மயிலையும், சிங்கம் ஈன்ற குட்டியையும் ஒருங்கே வைத்தால், அவர்கள் மயிலைத் தொடமாட்டார்கள்; போட்டி போட்டுக்கொண்டு சிங்கக் குட்டியைத்தான் வாரியணைப்பர்!

அந்தப் பெண்மணிகள் — வீரம் வளர்க்கும் விளைநிலம்; மானம் காக்கும் மறவர் குலம்! 'கலித்தொகை' முழுவதும் அத்தகைய தமிழ்க் குமரிகள்; எப்படி காதலையும், வீரத்தையும் வாழ்க்கையில் பொருத்தி; இல்லறம் நடத்தினார்கள் என்கிற வரலாற்றைத்தான் பறை சாற்றுகிறது.

முல்லை நிலத்திலே ஒரு பழக்கம்-அங்கே கண்ணொடு கண் நோக்கினால்மட்டும் காதல் வாழ்வு மலர்ந்துவிடாது. காதலரிருவர் கருத்தொருமித்தவராய் இருந்தால்கூட, அவர்கள் குறிப்பிட்ட நாளன்று, போட்டி மேடைக்கு வரவேண்டும். அங்கே வேலினும் கூர்மையான கொம்புகள் கொண்ட காளைகள்வரும்; கோதையை மணக்க விரும்பும் காதலனும் வருவான்.

ஊர் அறிய, உலகறிய குளிர் மலர்ச் செல்வியை தழுவுவதற்கு முன்னர். வனவேங்கை போல சீறிவரும் எருதுகளைத் தழுவி—அவன் அடக்கவேண்டும். இந்த வீர விளையாட்டைத்தான் 'ஏறு தழுவுதல்' என்று சொல்வர், முல்லை நிலத்தோர!

அந்த நிகழ்ச்சியின்போது சீவிவிடப்பட்ட காளைகளின் கொம்புகளால் குத்துண்டு, மண்ணிலே சாய்ந்து விடுவர், சிலர்! குடல் சரிந்து, குருதி மழை பொழிந்தபோதும்கூட, கோதையின் கொவ்வை இதழ்களை சிந்தையில் கொண்டு; எருதுகளின் விலாவொடித்து வெற்றி பெருபவனே மங்கையிடமிருந்து மலர் மாலையைப் பெறுகிறான்.

அந்த ஆய்ச்சியர் கூட்டமும் அப்படித்தான்!

செக்கர் வானம், செந்நிறத் தாமரை, சிவந்த பவளம்-இவைகளையெல்லாம்கூட அவர்கள் அதிகம் விரும்புவதில்லை.

கைப்பிடித்து அணைக்கும்போது, ஏறு குத்தி ரணமான வீரர்களுடைய செந்நிற இரத்தம் தம் தோளிலே படவேண்டுமென்று தான் அவர்கள் விரும்பினர்!

துர்க்கையின் முன்னர் படைக்கப்பட்ட குங்குமத் தூளை—செந்தூரப் பொடியை—அவர்கள் தூக்கி எறிந்தார்கள்! இரத்தம் வடியும் வீரத் தோள்களைத் தொத்திக்கிடந்தார்கள்!

'முல்லைக்கலி'யிலே காணக் கிடக்கும் அந்த வீரக் கவிதை இதோ: மத்தெடுத்து; தயிர் கடையும்போது, பானையிலிருந்து தெறித்து தன் தோளில் பட்ட வெண்ணிறப் புள்ளிகளோடு, ஏறு தழுவிய வீரனின் செந்நிறத்துளிகளும் படுவது தன் தோளுக்கு அழகு சேர்ப்பது என்று எண்ணி மகிழ்ந்ததாம், அந்த வீர உள்ளம்!

> பல்லூழ் தயிர்கடையத் தாஅய புள்ளிமேல்
> கொல்லேறு கொண்டான் குருதி மயக்குறப்
> புல்லல்எந் தோளிற்குஅணியோஎங் கேளே.

—மாறன், பி. ஏ. (ஆனர்ஸ்)



# கட்டாந்தரையில் விதை தூவாதீர்! களர் நிலத்திலா கதிர் காணுகிறீர்?

## பொன்மொழியின் கடிதம்

அன்புள்ள குமார்,

நெடு நாட்களுக்குப் பிறகு இந்த வாரம் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறாய். காரியமல்லாமல் கடிதமெழுதுவதை வெறுக்கும் எனக்கு, உன்னுடைய போக்கு மிகவும் பிடித்திருக்கிறது. "இங்கே எல்லோரும் அங்கிருப்போர் சுகமறிய ஆவல்" என்று வாரத்திற்கு ஒன்பதாயிரம் கடிதம் எழுதுகிற சபலமும் இன்னும் இந்த நாட்டில் நிலவத்தான் செய்கிறது.

நீ, தி. மு. கழகத்தில் சேர்ந்த பிறகு இரண்டாவது முறையாக இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறாய். முதல் கடிதத்தில், கட்சியின் கொள்கைகளைப் பற்றி விளக்கமாக எழுதிக் கேட்டிருந்தாய். இப்போது, 'பொதுவுடமைக் கட்சிக்காரர்களுக்கும் நமக்கும் என்ன வேறுபாடு? அதை மக்களுக்கு விளக்குவதெப்படி?' என்று கேட்டிருக்கிறாய். சென்ற வார தினசரி செய்தித் தாள்களில் வந்த இரண்டு, மூன்று செய்திகளைக் கொண்டு மட்டும் உனக்கு அவர்களின் அவசரப் போக்கைச் சொல்லி விடுகிறேன். அதை வைத்துக்கொண்டு நீ அதற்குமேல் உனது சிந்தனைக்கேற்றபடி விரிவாக்கிக் கொள்ளலாம். அல்லது, உனக்கு வேறு பல உதாரணங்கள் கிடைத்தாலும் அதையும் சேர்த்துக் கொள்ளலாம்.

பொதுவுடமைக் கட்சியினர், நாட்டின் நல்வாழ்விற்கு உடனடியாகத் தேவைப்படுவது பொருளாதார முன்னேற்றம் என்கிறார்கள். ஆனால் நாம், பொருளாதார முன்னேற்றம் ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு அவசியம்தான்; ஆனால் அந்தப் பொருளாதார முன்னேற்றம், சமுதாய முன்னேற்றத்திற்குப் பிறகு கவனிக்கப் படவேண்டியவை என்கிறோம். நமது இந்தக் கருத்தை பொதுவுடமைக் கட்சியினர் தீவிரமாக எதிர்க்கிறார்கள் — கிடைக்கின்ற மேடைகளிலெல்லாம் வசைமாரி பொழிகிறார்கள். சமுதாய முன்னேற்றமில்லாத பொருளாதார சீர்திருத்தம் வெற்றி பெறாது — வெற்றிபெற முடியாது என்பதை தி. மு. க. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லிவந்திருக்கிறார், பல மேடைகளிலே! இன்னும் சொன்னால் பொதுவுடமைக் கட்சித் தலைவர் ஜீவானந்தத்தை மேடையில் வைத்துக் கொண்டே அண்ணா அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

பொதுவுடமைக் கட்சியினர் தங்களது மேடைகளிலெல்லாம் "ரஷ்ய மாமண்டலத்தைப் பாருங்கள்; சீனாவின் சிறப்பை நோக்குங்கள்" என்று பேசுவது வழக்கம். நீயும் இதை பலமுறை கேட்டிருக்கக் கூடும். "தமிழர் சமுதாயம் ஏழைகள் சமுதாயம். அத்தகையோரிடம் ஏழ்மையைப் பற்றிப் பேசியே நாம் அவர்களிடம் பற்றும் பாசமும் கொண்டவர்கள் என்பதை நிலைநாட்டிக் கொள்வோம்" என்று எண்ணி ஏமாந்தவர்கள் பொதுவுடமைக் கட்சிக்காரர்கள். இது, அவர்களைப் பற்றிய எனது பொதுவான அபிப்பிராயம். அந்த எண்ணம் — பொதுவுடமைக் கட்சிக்காரர்களின் அந்த ஆசைக்கனவு நினைவாகவில்லை. காரணம், சீனாவும், ரஷ்யாவும் சீர் பெற்றதற்குக் காரணமே பிற்காலத்திலே தோன்றிய பொதுவுடமை வாதிகளின் தொண்டால் அல்ல; அதற்கு முன்பு அந்த இரு நாடுகளில் வாழ்ந்து மடிந்த சிந்தனைச் சிற்பிகளின் எழுத்தும், பேச்சும் தான் என்பேன். இதை அண்ணா அவர்கள் விளக்கமாக பலமுறை எடுத்தோதியிருக்கிறார்கள், அந்த முகாம் வாசிகளுக்கு. சீனத்துப் பெண்களின் கூந்தலை வெட்டி, பஞ்சுப்பாதங்களை கட்டிவந்த அந்த நாட்டு சம்பிரதாயத்தை ஒழித்தவர் சிந்தனைச்சிற்பி சன்யாட்சன் தான் என்பதை பொதுவுடமை வாதிகள் மறுக்க முடியாது அந்நாட்டு மக்களிடையே மறுமலர்ச்சி எண்ணங்களை விதைத்திட்ட பெருமையும் சன்யாட்சனைத்தான் சாரும். சன்யாட்சன் அன்று புதுமை மணத்தைப் பரப்பியிராவிடில் இன்றைய மாசேதுங்கின் நல்லாட்சி எந்நிலை அடைந்திருக்குமோ! இது போலத்தான் ரஷ்யாவிலும்! சீர்திருத்த நோக்கம் பெற்ற சிறு கதை மன்னர்களும், நாவலாசிரியர்களும் தோன்றி அங்கே புரட்சிக் கருத்துக்களைத் தூவிப் போயிரா விட்டால், இன்று இருப்பவன் நாளைய தினம் காணாமல்போகும் பயங்கர நிலைதான் ஆட்சி செய்து கொண்டிருக்க முடியும். சீனாவிலே சன்யாட்சனும், ரஷ்யாவிலே டால்ஸ்டாய்ஸ் போன்றவர்களும் உழுது பண்படுத்தி விட்டுப் போன நிலத்திலேதான் இன்று மாசேதுங்கும், புல்கானினும் பயிரிட்டு அறுவடை செய்கிறார்கள். உழுதுப் பயிடும் அந்த முதல் பணி இந்த மண்ணுக்கு வேண்டாமா? தென்னாட்டுக்கு வேண்டாமா? உழுது, நீர் பாய்ச்சி, நிலத்தைப் பண்படுத்தாமல் கதிர் மணிகளை எதிர்பார்ப்பது அறிவுடமையாகுமா? அப்படி எதிர்பார்ப்பவர்களின் எண்ணந்தான் தூய்மையானதாகுமா? உழைக்காமல் ஊதியத்தை எதிர்பார்க்கும் கருங்காலிகளைக் கண்டிக்கும் பொதுவுடமைக் கட்சி, நிலத்தை உழாமல், களத்திற்கு மட்டும் கோணிச் சாக்குகளை எடுத்து வந்திட எண்ணுகிறதே, இது என்ன பொதுவுடமையோ?

அன்புள்ள நண்பா, எனக்கு இதெல்லாம் பழைய சதை! உனக்கு இந்தக் கருத்துக்கள் புதியவை என்றுதான் நான் நினைக்கிறேன்.

தினசரி, செய்தித் தாள்களை நீ படித்து வருவாயேயானால், இந்த நாட்டின் அறிவு வளர்ச்சி எப்படி இருக்கிறது என்பதை நீ ஒருவாறு அறிந்து கொண்டிருக்க முடியுமென்று நினைக்கிறேன். அதுவும் இந்த வாரத்தில் என் கண்ணுக்குப்பட்ட சிலசெய்திகள் பொதுவுடமைக் கட்சிக்கு பதில் தரும் வகையிலும், வேதனையையும், வெட்கத்தையும் கொடுக்கக் கூடியனவாகவும் இருக்கின்றன.

பட்டதாரிகளுக்குத் தான் வாக்குரிமைஉண்டு என்ற நிலை, இந்த இந்திய துணைக்கண்டத்தை விட்டு வெள்ளையர்கள் கப்பலேறிய பின் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு என்று மாற்றப் பட்டது. இந்த மாற்றம், அடிமைப்பட்டிருந்த துணைக் கண்டத்தின் முகத்திலே ஊசிமுனை அளவாயினும் மகிழ்ச்சியைத் தரத்தான் செய்தது. வயது வந்தவாக்காளர்கள் பெருமைப் பட்டார்கள். ஆனால் இதுபற்றி இன்னும் புரிந்து கொள்ளாத அளவிலேகூட மக்கள் இருக்கிறார்கள் என்றால், சமுதாயம் எவ்வளவு மறுமலர்ச்சி அடைந்திருக்கிறது என்று நினைக்கிறாய்! பொருளாதாரம் வளம் பெற வேண்டுமென்கிறார்கள். ஆனால் மக்கள் தங்களின் உரிமை இன்னின்ன என்றுகூட சரிவரத் தெரிந்து கொள்ளவில்லை. கீழே செய்தியைப் படி:

"மதுரை, மார்ச்-3--திருவில்லிபுத்தூர் தொகுதி உபதேர்தலில், மேலராஜகுலராமன், ஐயநாதம்பட்டி என்ற இரு கிராமங்களை அடியோடு கவனிக்கவேயில்லை. அவற்றிலிருந்து வந்த ஓட்டுப் பெட்டிகளை அதிகாரிகள் திறந்து பார்த்தபோது ஒரு வோட்டுச் சீட்டுகூட அகப்படவில்லை."

இது பத்திரிகைச் செய்தி. அதுவும் முழுக்க முழுக்க காங்கிரசை ஆதரிக்கும் 'தினமணி' தரும் செய்தி. மக்களின் மனவளம் இவ்வளவு ஏழ்மையாக இருக்கும்போது, இந்நாட்டை முதலில் பொதுவுடமைப் பூங்காவாக்கித்தான் தீருவோம் என்கிறார்களே, இது நடைபெறக்கூடியகாரியமா நண்பா?

இன்னொரு செய்தியைக் கேள்! இதுவும் உனக்கு வேதனையைத்தான் தருமென்று கருதுகிறேன். வசதியில்லாதவன், வாழவகையற்றவன், சமுதாய அமைப்பின் கோளாறால் திருடித்தான் பிழைக்க வேண்டும் என்ற பரிதாப நிலையில் இருப்பவன் திருடினால், கொலை புரிந்தால், அவனுக்காகப்பரிந்து சமுதாய சீர்திருத்தவாதிகள்

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

### அறிவிப்பு

இதுவரை 'முரசொலி' உதவி ஆசிரியராக இருந்த தோழர் தென்னரசு இப்பொழுது நமது அலுவலகத்தில பணியாற்றவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆ. ர்.)

மார்ச் 20 - ஐந்தாண்டுத்

# தலையங்கம்

சென்னை 11—3—55 வெள்ளி

## தேர்தல் முடிந்தது !

திராவிடத்தின் ஒரு பகுதியாம் ஆந்திரநாட்டின் தேர்தல் முடிவுகள் யாவும் தெரிந்துவிட்டன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தங்களுடைய கேந்திர மையத்திலேயே தோல்வியைத்தழுவவேண்டிய பரிதாபமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. பெருவாரியான இடங்களை—196 பேருள்ள சட்டசபையில் 146 இடங்களை-காங்கிரஸ் கட்சியும், தேர்தலுக்காக காங்கிரசுடன் ஒன்று கலந்த சில்லறைக் கட்சிகளும் கைப்பற்றியிருக்கின்றன.

கம்யூனிஸ்ட் கட்சியினர் தெலுங்குச் சீமை முழுதும் அபேட்சகர்களை நிறுத்தினர்; உபகண்ட முழுவதிலுமுள்ள 'பெரிய புள்ளிகள்' யாவும் அங்கேதான் வட்டமிட்டன—அப்படி இருந்தும்கூட, அங்கே வாட்டம்தரும் சூழ்நிலை எப்படியோ மலர்ந்துவிட்டது!

சென்ற தேர்தலின்போது செல்வாக்குடன் திகழ்ந்த கட்சி இப்போது செல்லாக் காசாக மதிக்கப்பெறும் நிலைக்கு ஆளாகிவிட்டது. ஓங்கிப் பறந்த செங்கொடி இப்போது தாழ வேண்டிய நெருக்கடியான சங்கடத்தைத் தாங்க வேண்டியதாக இருக்கிறது. சொல்வதற்கே வெட்கமாக இருக்கிறது—15?-இடங்களிலே அபேட்சகர்களை நிறுத்தி, போட்டியிட்டார்கள்—பதினைந்தே இடங்கள்தான் கிடைத்திருக்கின்றன! சென்ற பொதுத் தேர்தலின்போது அவர்களுக்குக் கிடைத்த ஸ்தானங்களில் மூன்றில் ஒரு பங்கைத்தான் இப்போது அவர்களால் பெற முடிந்திருக்கிறது!

இந்திய உபகண்டத்தின் **'மலேயா'**வாக இருந்த, அரசாங்கத் தர்பார் தொல்லைகள் விளைவித்த கம்யூனிஸ்ட் கோட்டையாம் கிருஷ்ணா ஜில்லாவிற்கூட, அவர்களுக்குக் கிடைத்த ஓட்டு, சென்ற தேர்தலில் கிடைத்ததைக் காட்டிலும் குறைவாகத்தான் இருக்கிறது.

ஏன் இந்த நிலைமை? எப்படி உருவாகியது இந்த சோகச் சூழ்நிலை?

அவர்கள் நினைப்பதுபோல ஆந்திரமக்களது மனதிலே மண்டிக் கிடந்த கம்யூனிச இருள், சூறாவளி வேகத்தில்—சந்துபொந்துகளிலெல்லாம் புகுந்து, தேர்தல பிரச்சாரம் செய்த 'ஆசியாவின் ஜோதி' கண்டு, ஓடி ஒளிந்துகொண்டதா?

அப்படி, நேருவின் பிரச்சாரத்தால் மட்டுமே கம்யூனிஸ்டுகள் தோற்றார்கள் என்றால், சென்ற தேர்தலின்போது சட்ட சபையில் தேசீய நண்பர்களது தொகை தேயவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காதே!

ஒரு சமயம், கம்யூனிஸ்ட் ரஷ்யாவின் கருத்திதழாம் **'பிராவ்டா'** பத்திரிகை, மோதிலால் மைந்தரின் ஐந்தாண்டுத் திட்டத்தையும், அது விளைவித்ததாகச் சொல்லப்படும் பலன்களையும் புகழ்ந்து எழுதியதே; அதைப்படித்ததும் ஆந்திர மக்களிடையே, காங்கிரஸ் சர்க்கார்மீது—அவர்கள் நல்லது செய்வார்களென்று—மறைந்திருந்த நம்பிக்கை நட்சத்திரம் மீண்டும் உதயமாகிவிட்டதா?

அப்படி இருப்பதற்கும் நியாயமில்லை. ரஷ்யப் பத்திரிகையொன்று சொல்லித்தான், காங்கிரஸ் ஆட்சியின் 'திறமை'யை உணரவேண்டும்-என்கிற அளவுக்கு ஆந்திர மக்கள் உறங்கிக் கிடக்கவில்லை. ராயலசீமாவிலே அன்று உருவெடுத்த கோரக்காட்சிகள் மறையாத வடுக்களாய் இன்றும் உலவுகின்றன. எலும்புக் கூடுகளாய்த் திகழும் அவர்களது உடலிலே இன்னும் சதைத்துண்டங்கள் பொறுத்தப்படவில்லை.

தொல்லைகள் யாவும் தொடர்கதைபோல் நீண்டு கொண்டிருக்கும் இந்த நேரத்தில், காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி எப்படி வந்து குதித்தது?

அமைப்பு முறையிலே—பகைவர்களை அடக்கி ஒடுக்கும் சாணக்கியத் திறனிலே—முன்னணியில் நிற்கும் **எஸ். கே. பட்டீல்** பம்பாயிலிருந்து ஆந்திராவுக்கு வந்து தேர்தலுக்காக அரும்பாடு பட்டாரே; அதனால் அவர்கள் ஜெயபேரிகை கொட்டிவிட்டார்களா?

இதுகூட காங்கிரசின் வெற்றிக்கு நல்லதோர் காரணமாக அமையவில்லை. ஏனெனில், கம்யூனிஸ்ட் அபேட்சகர்கள் தேசீயவாதிகளால் மட்டுமல்ல; இந்திய அரசியலில் திக்கற்றவர்களாய் ஆகிவிட்ட பிரஜா சோஷலிஸ்டுகளால்கூட தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள்! ஒன்றுக்கும் உதவாத உதிரிகளாம் சுயேச்சைவாதிகள்கூட கம்யூனிஸ்டுகளை புறங்காட்டச் செய்திருக்கிறார்கள்!

ஆவடியிலே நிறைவேறிய 'மாதிரி சோஷலிச'த் தீர்மானம்கூட காங்கிரசின் வெற்றிக்கு பாதை வகுத்துக் கொடுத்திருக்க முடியாது. ஆந்திர மக்கள் ஓட்டுச் சாவடியில் நுழைவதற்கு முன்னர் நிறைவேறிய அந்தப் போலித் தீர்மானம் அவ்வளவு விரைவில் மக்கள் இதயங்களில் படிந்திருக்க முடியாது.

பின்னர் ஏன் ஆந்திரம்வாழ்வோர் காங்கிரசாரிடம் பெருவாரியான ஓட்டுகளைக் குவித்தனர்?

அதற்கும் ஓர் காரணம்—ஆணிவேர்விட்ட காரணம்—காணக் கிடக்கிறது.


ஆமாம்; கம்யூனிசம்—உயர் எண்ணங்கள் கொண்ட கொள்கைதான்; நல்வாழ்வெனும் வண்ணத் தாமரைகளை மலர்விக்கும் கதிரவன்தான். இதை அனைவரும் ஒப்புவர். பண முதலைகள்கூட அந்தரங்கத்தில் இதைத்தான் எண்ணுவர்.

ஆனால் இத்தகைய ஒப்புயர்வற்ற கொள்கைக்கும் இந்திய உபகண்டத்திலே ஒரு மாபெரும் எதிரி இருக்கிறான். அது வேறு யாருமல்ல; இந்திய கம்யூனிஸ்டுகள்தான் உண்மையான கம்யூனிசத்தின் வைரிகளாக இருக்கிறார்கள்!

★ 10-ம் பக்கம் பாரக்க

## தென் மொழித் தாத்தா !

மொழிகள் குல முதல்வியாம் தமிழ் மொழியின் தலைப்பிள்ளை—தங்கக் கருவூலம்—உயர் எண்ணங்கள் மலரும் சோலை—நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களுக்கு, சென்றகிழமை 'டாக்டர்' பட்டம் வழங்கி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சிறப்பு பெற்றிருக்கிறது. இலக்கியத்தின் கரைகண்ட அந்த மேதைக்கு முத்தையா செட்டியார் பொன்னாடை போர்த்தியிருக்கிறார்.



மண்ணாளும் 'மகராசர்கள்', கண்ணும் நம் தமிழ் மொழியின் பெருமைக்கு இழுக்கு சேர்க்க முயன்ற போதெல்லாம் நாவலர், கேடயம் ஏந்தி, தமிழைக் காவல் புரியக் கிளம்பிவிடுவார். ஏறு நடையும், இலக்கணச் செறிவும் கொண்ட அந்த பைந்தமிழ்க் கிழவர் தருக்குமிக்கோரின் இடுப்பொடிக்காத வரை ஒரு கணமும் கண்ணயரமாட்டார்! பெற்றெடுத்த தாய்க்கு ஓர் ஆபத்து என்றால்கூட சித்தம் கலங்காதவர் தமிழுக்கு ஆபத்து என்றால் எரிதழல் போல் கொதித்துக் கிளம்பிவிடுவார். முன்பு, இந்திப் பெண்ணாள் நமதகத்தில் அடியெடுத்து வைத்தபோது, பண்டித சிரோன்மணிகளெல்லாம் தொடைநடுங்கி வாழ்ந்தகாலை-நமக்கெல்லாம் வழியுரைத்து, போர்க்களத்திலே அவர் குதித்ததை நம்மால் மறக்க முடியாது.

'கல்கி'யார் கூட்டம் வாழ்த்துக்கூற, நமதன்னையை தாழ்த்திடும் செயலாகயாம் 'மணிப்பிரவாள' நடையை 'ரசிகமணிகள்' பரப்பியபோது, அந்த முயற்சியை தோல்வியில் ஆழ்த்திய அந்த தென்மொழித் தாத்தா நாவலர்தீவினரின் நினைவிற்குரியவர்.

பாண்டியன் மீசைகொண்டு—புறநானூற்றின் வீரமெல்லாம் நெஞ்சில் கொண்டு—நம்மைத் தீண்டிடும் பாம்பாம் வடமொழியின் நச்சுப் பல் நசுக்கும் அவர் திறமை, தமிழுள்ளவரை நிற்கும்! என்றும் இந்தத் தொண்டுக் கிழவரின் புகழ் பாடியபடி இருக்கும்!

## ஆசிரியர் மு. க. உடல் நிலை

ஆசிரியர் மு. க. அவர்கள் இன்னும் எழும்பூர் மருத்துவமனையில் இருந்த வண்ணம் சிகிச்சை பெற்று வருகிறார்கள். விரைவில் பூரண சுகம் கிடைத்துவிடுமென்று டாக்டர்கள் கூறுகிறார்கள். பூரண ஓய்வு அவசியமென்றும் வலியுறுத்தியுள்ளார்கள்.

# திட்டக் கண்டன நாள் !

# வடக்கே 'தொழிற் புரட்சி'! தெற்கே வறண்ட காட்சி!

## 'ஆசிய ஜோதி'க் கருகில் 'ஆசியாவின் நோயாளி'யா?

★ **தொழிற் புரட்சி சோர்பிக் கிடந்த இங்கிலாந்தை 'உலகத்தின் தொழிற்சாலை' யாக்கியது — காலனி நாடுகளை உண்டாக்கிக் கொடுத்து வையகமெங்கும் மார்க்கெட்டைத் தேடித் தந்தது!**

★ **இதோ; விந்தியத்திற்கு அப்பால் இந்திய உப கண்டத்தின் தொழிற்சாலை தயாராகிறது—**

★ 9-கோடி ரூபாய் சிலவில் 'சிந்திரி' எரு உற்பத்தித் தொழிற்சாலை!

★ அங்கெல்லாம் மின்சாரம் வழங்க 'பக்ரா-நங்கல்; தாமோதர்வேலி; ஹீராகுட்' அணைக்கட்டுகள்!

★ சுமார் 5—கோடியிலே 'சித்தரஞ்சன்' இன்ஜின் தொழிற்சாலை!

★ 'பென்சிலின்' தயாரிப்புக்கு 2-கோடி ரூபாய் மூலதனம்!

★ 1-கோடி ரூபாயில் 'மண்டி' உப்பு தொழிற்சாலை!

★ 39-இலட்சத்தில் 'டி. டி. டி.' தொழிலகம்!

★ 'நேஷனல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ்' ஸ்தாபனத்திற்காக சுமார் ஒண்ணரை கோடி!

★ 'உத்தர பிரதேச சிமிட்' தொழிற்சாலைககாக இரண்டேமுக்கால் கோடி!

★ 2-கோடி ரூபாயில் 'நீப்பா' பேப்பர் தொழிற்சாலை!

★ அதே அளவு முதலீட்டிற்கு 'சிாசிலக் செயற்கை பட்டு' தொழிலகம்!

★ 60-இலட்சத்தில் 'சிர்பூரிலே' காகிதத் தொழிற்சாலை!

★ 'உத்தர பிரதேச நுணுக்கக் கருவிகள்' தயார்செய்யும் தொழிலகத்திற்காக 50-லட்சம!

★ ஜப்பானுக்கு அடுத்தபடி ஆசியாவின் தொழில் துறை தலைவனாகிறது டில்லி; வலிமை மிகுந்த வியாபாரிகளாகுகின்றனர் வடக்கத்திய சேட்டுகள்!

இங்கு; நம் நிலைமை என்ன?

ரோமரும், சீனரும், தூரத்து யவனரும் பாய்மரம் விரித்து, நீ அனுப்பும் பண்டங்களுக்கு காத்திருந்தனரே! அய்யகோ! தமிழகமே—

நீ இருட்டறையில் இருக்கின்ருய்—நாங்களோ, குருடர்களாய் தவிக்கின்ருேம்—

தென்கடல் மிதந்த வணிகப் பரம்பரை வன்நெஞ்சர்களின் அடிமையாவதா?

தூங்கும் தெக்கணமே! வடவரின் மார்க்கெட்டாய்-அந்தக் கொடியோரின் மாற்ருந்தாய்க் குழந்தையாய்—தாசானுதாசனாய் இருப்பதற்குத் தயாராகிவிட்டாயா?

இல்லையேல் உடனே விழித்தெழு; கண்களை அகட்டு; மண்மேடாய் ஆகிவிட்ட உன் சுந்தர பூமியைப் பார்—

முக்கடல் குவிக்கும் முத்துகள் எங்கே? தப்புறச் சிவந்த பவளம் எங்கே? இதையெலாம் சுமந்து, திரைகடல் மிதந்து, திரவியம் குவித்த தீரர்கள் இன்றேன் இல்லை? மோதிரம் நுழைந்த பொன்ஞர் இழையும், துகிலும் அனுப்பி, வையகத்தோரின் மானம் காத்த உன் திறமைதான் எங்கே?

எல்லாம் பாழ்! பாழ்! சேற்றிலே கிடக்கிருேம்; நம்மை மிதித்துச் சாருக்கு தாவி வருகிறது வடநாட்டு எருமை!

நம்மினும் சிறிய ஸ்விட்சர்லாந்து சிரிக்கிறது; ஜப்பான் ஏளனக் குரல் கொடுக்கிறது—

தெற்கு தாழ்கிறது—ஆசியாவின் நோயாளியாக திராவிடம் மாறுமுன்னர்—அருமைச் சோதரரே!—டெல்லி ஏகாதிபத்தியத்தின் அநீதியை-அக்கிரமத்தை-அதனுல் விளைந்த தாங்கொணுத் துயரத்தை-எதிர்த்துநிற்க கண்டனக் குரல் கிளப்புவீர்—உரிமை முரசு தட்டுவீர்!

★

# நொண்டி மாடாக நொந்துகிடக்கும் தமிழ்நாடு!

## டாக்டர். மு. வரதராசனுர் தரும் அறிவுரைகள்!

நொண்டி மாடு மந்தையோடு போய் மேய்வது அந்த மந்தைக்கும் இடையூறு; நொண்டி மாட்டுக்கும் இடையூறு. மேய்ப்பவன் அதன் மேல் கொஞ்சம் கருத்தாக இருந்தால் ஒரு சிறு நன்மையும் ஏற்படலாம்; மேய்ப்பவனும் அதைப் பொருட்படுத்தாமல் விட்டால், மந்தையின் நிலையைவிட அந்த மாட்டின் நிலை மிக இரங்கத் தக்கதாகும்.

### வடகோடி

இந்திய அரசாங்கத்தில் ஒரு பகுதியாக உள்ள தமிழ் நாட்டின் நிலை நொண்டி மாட்டின் நிலையாகவே இருக்கிறது.

இந்திய அரசாங்கத்தின் தலைமை வடகோடியில் டில்லி நகரத்தில் உள்ளது. விஞ்ஞான வளர்ச்சியால் வேகமான போக்குவரவு கருவிகள் ஏற்பட்ட பிறகு, இவ்வாறு வடகோடியும் தென்கோடியுமாக இருப்பதால் இடர்பாடு ஒன்றும் இல்லை எனலாம். தொலைவு என்ற இந்த ஒரு காரணம் மட்டும் இருந்தால் இது உண்மையே ஆகும். ஆனல் வேறு சில குறைகளும் உடன் சேரும்போது தொலைவில் இருத்தல் குறைகளுக்குத் துணை செய்வது போல் ஆகிறது...

### வாய் வளம்

தமிழ் நாட்டில் இரண்டு மூன்று மாவட்டங்கள் தவிர, மற்றவை நீர்வளம் அற்றவை; மூளைவளம், வாய்வளம் தவிர மற்ற வளங்கள் பொதுவாகவே குறைவு. அதனல் வேலையில்லாத் திண்டாட்டம் அளவுகடந்து பெருகிவருகிறது. இந்த நிலையில் ஐந்தாண்டுத் திட்டங்களில் கொஞ்சம் கூடுதலான பங்கு கேட்க உரிமை இருக்கிற தென்பதைத் தமிழ்நாடு உணரவில்லை. வடநாட்டில் இந்தத் திட்டங்களின் பயனுக வேலையில்லாத் திண்டாட்டம் பெரும்பாலும் ஒழிந்துவிட்டதாகக் கூறுகிருர்கள். ஆனல் தமிழ் நாட்டு நிலை நேர் மாருக உள்ளது. இதை எடுத்துப் பேசுபவரும் இல்லை. எப்படியோ மாடு மந்தையில் இருக்கிறது! மேய்கிறதா இல்லையா என்று யாரும் கவலைப்படவில்லை.

வியாபாரிகள் தங்களுக்குள் பேசிக்கொள்கிருர்கள், வடநாட்டார் இட்டதுதான் சட்டம்-தமிழ் நாட்டு வியாபாரம் புறக்கணிக்கப் படுகிறது என்று பேசிக்கொள்கிருர்கள். ஒருவகை ஏகாதிபத்தியமே நடைபெறுகிறது; தலைவர் நேரு எல்லாவற்றையும் தாமே கவனிக்கமுடியுமா? மற்றவர்களுக்கு அவரைப்போன்ற பெருந்தன்மை இருப்பதாக கூறமுடியவில்லை; நம் நாடு புறக்கணிக்கப் படுகிறதென்றும் பேசிக்கொள்கிருர்கள்.

எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் மாகாண அரசாங்கம் செய்யக்கூடியது இல்லை என்றும், மத்திய அரசாங்கத்தின் விருப்பமே நிறைவேறக்கூடியது என்றும், மாகாண அரசாங்கம் உரிமை குறைந்த நகரமன்றம் (முனிசிபாலிடி) போல் ஆய்விட்டதென்றம் மக்கள் பேசிக்கொண்டுவருகிருர்கள். மாகாணப் பற்றும் மொழிப் பற்றும் இல்லாமல் மத்திய அரசாங்கத்தைக் காக்கைபிடித்த வல்லவர்களுக்கு பெரிய உத்தியோகங்கள் (தேர்தலில் தோற்ருலும்) கிடைப்பதை மக்கள் பார்த்து வருகிருர்கள். அதனல் அறிவாளிகளின் அறிவு தம் மாகாணத்திற்குத் துரோகம் செய்தாவது மத்திய அரசாங்கத்தைக் காக்கைப் பிடிப்பதில் முனைந்து வருவதாயும் உணர்கிருர்கள். மத்திய அரசாங்கத்தைக் காக்கைப்பிடிக்கும் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், கலைக்

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

# மலர் கசக்கும் வண்டுகள்!

மார்ச் திங்கள் — பள்ளிச் சிறுர்கள் வரப்போகும் தேர்தலுக்கு, இரவைப் பகலாக்கி பாடப் புத்தகங்களைப் புரட்டுகிறார்கள்.

இந்த நாட்டு நிதி அமைச்சர்களும், அப்படித்தான். மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் ஒன்றன்பின் ஒன்றாக தங்களுடைய 'பட்ஜெட்'டுகளை மக்கள் பிரதிநிதிகளின் முன்னர் விரித்துவிட்டார்கள்.

எங்கு நோக்கினும் துண்டு விழும் பட்ஜெட்டுகள் — துவண்டுபோன மக்களிடமிருந்து வரி பிடுங்க புது வழி இருக்கிறதா என்று துருவித் துருவிப் பார்க்கிறார்கள்.

விலைவாசிகள் இறங்கிவரும் காலமிது. பஞ்சமும் பட்டினி

## மக்கள் நலன் பொசுக்கும்

யும் குறைந்தபாடில்லை. ஏழையர் கூட்டம் பெருகிக்கொண்டுதான் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் புது வரிகள் நம் மீது பாய வருகின்றன.

முதலாளித்துவத்தை கொள்கையாகக் கொண்ட அரசுகள், தங்கள் இனத்தைக் கொழுக்க வைப்பதற்கு ஏழைகளின் முதுகிலே வரிச்சுமையை ஏற்றுவார்கள். துண்டுவிழுவதைத் தடுக்க முடியாத நிதி அமைச்சர்கள்— வரி விதிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று உணரும் பொருளாதார நிபுணர்கள், வரி கொடுக்கும் சக்தியுள்ள மேட்டுக் குடியினரிடமிருந்து வெள்ளிக் காசுகள் பறிப்பதுதான் வழக்கம். மக்களின் நலத்திலே கருத்துகொண்ட பேரரசுகள், புது வரிகள் என்னும் ஓநாய்களை ஏழைகள் என்னும் ஏதுமறியாத ஆடுகளிடமிருந்து எவ்வளவு தூரம் விலக்கி வைக்க முடியுமோ அவ்வளவு தூரம் பிரித்து வைப்பதற்குத்தான் முயலுவார்கள். அந்த வகையில் பொருளாதாரக் கொள்கையை வகுத்துக்கொள்ளும் அரசாங்கத்தைத்தான் ஏழையர் பங்காளன் என்று சொல்லி பெருமைப்பட முடியும்.

ஆவடியிலே கூடி இன்னும் சரியாக இரண்டு திங்கள் முடியவில்லை. 'சோஷலிசம்' — அல்ல; அல்ல; — சோஷலிச 'பாணி' தான் தாங்கள் சமைக்கப் போகும் அரசாங்கத்தின் அஸ்திவாரம் என்று ஜெக மதிரக் கூறினார்கள். "காந்தியார் வகுத்த சர்வோதயக்கொள்கை எங்கே? சர்க்கா திட்டம் என்னவாயிற்று? ராமராஜ்யத்திற்குப் போகாமல், குறுக்கு வழியில் சோஷலிச சாம்ராஜ்யத்துக்குப் போகப் பார்க்கிறீர்களோ!"—என்று, வெந்துபோன உள்ளத்தோடு, வேதனையை வெளிக்காட்டிய உண்மை காந்தி பக்தர்களின் காது செவிடுபடும்படியாக பொதுவுடமைக் கோஷம் எழுப்பினர்கள். "சஞ்சலம் துடைக்க எழும்புது பாரீர், சமதர்ம சங்கநாதம்" — என்று விண்ணளாவக் கூவினர், மோதிலால் மைந்தர்.

ஆவடியிலே நடைபெற்ற இத்தனை ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகு — குமரிமுனையைத் தழுவி, இமயத்தைத் தாவி, சீனத்துத் தலைவர்களை— மாஸ்கோ மண்டலத்து அதிபர்களை ஆனந்தத்தில் ஆழ்த்தி— ஐசன்ஹோவருக்கும், மற்ற அமெரிக்கப் பிரபுக்களுக்கும் திகைப்பையும், திகிலையும் அன்பளிப்பாகத் தந்து, டில்லிக்கு திரும்பிவந்து சேர்ந்ததே; அந்த 'சோஷலிசமாதிரி'த் தீர்மானம்—அதை உற்பத்தி செய்தவர்கள்தான், இப்போது — வரப்போகும் நிதி வருஷத்திற்கு சில விதிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள், 'பட்ஜெட்' என்னும் பெயரால்! இந்த 'பட்ஜெட்'களிலே கொஞ்சமாவது சோஷலிச மணம் கவரவேண்டாமா? கடுகளவேனும் சமதர்மக் கொள்கை கண்ணுக்குத் தெரிய வேண்டாமா?

துவக்கத்தில் துல்யமாகப் பிரகாசித்து, பின்னர் கண் சிமிட்ட மறந்துவிடும் நட்சத்திரங்களைப் பார்த்திருக்கிறோம்!

முதலில் மோகனக் குரல் எழுப்பி, முடிவிலே ஆந்தையைப்போல அலற ஆரம்பிக்கும் சங்கீத ரத்தினங்களைச் சந்தித்திருக்கிறோம்!

## தேசீய வாதிகள்!

ஆனால் இந்த ஆவடி நட்சத்திரமோ, உலகளக்கும் விளம்பரத்துக்கு ஆளானதேயன்றி, ஒருமுறைகூட கண்சிமிட்டவில்லை. மின்மினிப் பூச்சியோ என்று சந்தேகிக்கும் அளவுக்கு அது மூலையில் முடங்கிவிட்டது.

சத்தியமூர்த்தி நகரிலே, வீணையின் இசையில் சோஷலிச நாதம் எழுப்பிய இன்னிசையாளர்கள் இப்போது கோட்டான் குரலில் முதலாளித்வ பிலாக்கனம் படிக்கிறார்கள்.

'சோஷலிச மாதிரி'த் திட்டத்தின் சூடு தணியுமுன்னர் லால்பகதூர் சாஸ்திரியால் கொண்டுவரப்பட்ட ரெயில்வே பட்ஜெட்டைப் பாருங்கள்—

இனிமேல் குறைந்த மைல்கள் பிரயாணம் செய்பவர்கள், அதிக மைல்கள் பிரயாணம் செய்பவரைவிட அதிகமான அளவு ஒவ்வொரு மைலுக்கும் கட்டணம் செலுத்தவேண்டும். அதாவது 150 மைல்கள் வரை மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்பவர்களுக்கு கட்டணம் சற்று குறைக்கப்படும்.

அதுமட்டுமல்ல; 300 மைல்களுக்குள்ளாக அனுப்பப்படும் உணவுத் தானியங்கள் போன்ற சுமைகளுக்குக்கூட இப்போது அதிகக் கட்டணம் செலுத்தவேண்டும். தூரத்தில் மட்டுமல்ல; எடை அளவில் கூட வித்யாசம் கற்பித்திருக்கிறார்கள். 20-மணங்குக்குக் குறைந்த பார்சல்களுக்கு அதிகக் கட்டணம் மட்டுமன்றி, பனிரெண்டரை சதவீத 'சர்சார்ஜும்' விதித்துள்ளார்கள்.

மூன்னூறு மைல்களுக்குக் குறைந்த தூரத்துக்கு அடிக்கடி பிரயாணம் செய்பவர்கள் யார்? ஏழை–நடுத்தர மக்கள்தான் குறைந்த தூரப் பிரயாணத்தில் ஈடுபட்டிருப்பவர்கள். அவர்கள் முதுகிலேதான், தூக்க முடியாத சுமையை லால்பகதூர் சாஸ்திரி ஏற்றி வைத்திருக்கிறார்.

"இதற்குக் குறை சொல்ல வந்துவிட்டீர்களே; 300 மைலுக்குமேல் பிரயாணம் செய்பவர்களுக்குக்கட்டணம் குறைத்திருக்கிறோமே?"—என்று அவர் பெருமைப்படலாம். அப்படி பிரயாணம் செய்பவர்கள் யார்? மிட்டா, மிராசுகள், மடியிலே கனமுள்ளோர், சொகுசுக்காக தூரப் பிரயாணம் செல்வோர்- ஏழைகள் அல்ல: அவர்களை அடக்கி வாழ்வோர்! அவர்களுக்குத்தான் ஆறுதல் தருகிறார், சோஷலிச மாதிரித் திட்டம் தயாரித்தவரில் ஒருவராம், சாஸ்திரியார்!

டன் கணக்கில் பார்சல் அனுப்பும் கனதனவான்களை ஒதுக்கிவிட்டு, 20-மணங்குக்குள்ளாக சுமை அனுப்பும் ஏழை-நடுத்தர வர்க்கத்தினரின் குரல்வளையை நெறிக்கப் புறப்பட்டுவிட்டது, நேரு அரசாங்கம்!

அதுகிடக்கட்டும்; இதோ ஆச்சாரியாரின் அருமந்த சீடர் சுப்ரமணியம் தயாரித்திருக்கும் பட்ஜெட்டைப் பாருங்கள்—

புதிய வரிகள் இரண்டு, ஓசைகிளப்பாமல் நமது மாநிலத்துள்ளே வர இருக்கின்றன. நீர்க்கூலி உள்ளிட்ட தீர்வை ரூபாய்க்கு இரண்டணு வீதம் உயர இருக்கிறது. மலிவான சிகரெட், பீடி போன்ற புகையிலைப் பொருள்கள் விற்பனைவரிக்கு இலக்காகின்றன!

விவசாயப் பண்டங்களின் விலைகள் திடீரென்று இறங்கி வரும் இந்த நாட்களிலேதான் 'மாதிரி சோஷலிசக்காரர்கள்' நில வரியின்மீது ஒரு உப வரியை ஏற்றியுள்ளார்கள்!

மலிவான சிகரெட்—பீடி— முதலியவற்றின்மீது விற்பனை வரியாம் — மலிவான பொருள்களை யார் உபயோகிக்கிறார்கள்? அளகப்பச் செட்டியாரா? வடபாதிமங்கலத்தாரா? அல்ல; அல்ல. இல்லாமையால் தவிக்கும் ஏழை மக்கள்தான்! கொல்லாமற் கொல்லுகிறார்களே, இந்த 'சோட்டா சோஷலிஸ்டுகள்' என்று வேதனைக் குரல் எழுப்பும் நடுத்தர வர்க்கம்தான்!

வரிப் பளுவை ஏற்றி ஏழை எளியவர்களை கூனல் முதுகுக்காரர்களாக்கிவிட்ட இவர்கள் தான் பேசிக்கொள்கிறார்கள்— தாங்கள் அவனி எங்கும் தேடினுலும் காணக் கிடைக்காத சமதர்மப் பூமியை இந்த தேசத்திலே அமைக்கப்போவதாக!


முன்னுள் முதலமைச்சர் ஓமாந்தூரார் மேல் சபையிலே அழகாக எடுத்துரைத்தார்: "மலரைக் கசக்காமல் தேன் எடுத்தப்போகும் வண்டைப் போல, மக்களுக்கு அதிகக் கஷ்டம் கொடுக்காமல் வரிகளை விதித்து வசூலிக்கவேண்டும்"— என்று!

ஆனல் பதவிச் சோலையிலே பறந்து திரியும் இந்த தேசீய வண்டுகளோ, தேன் பருகுவது மட்டுமன்றி, மந்திகளைப்போல மலர்களையும் கசக்கி விடுகின்றன!

சோஷலிசமே அவர்கள் நோக்கமாம் — ஆனல் நிறைவேற்றியிருக்கும் திட்டங்களிலே—பட்ஜெட்களிலே- அந்த நறுமணத்தையே காணோம்; முதலாளித்துவ முடைநாற்றம் தான் வீசுகிறது.

"ஆந்திரத் தேர்தலுக்காக செய்யப்பட்ட 'ஸ்டண்ட்' தானே ஆவடியின் சோஷலிசத் தீர்மானம் — அதைவிட்டு, 'பட்ஜெட்'களில் எல்லாம், நாங்கள் அந்தக்கொள்கையைக் கடைபிடிப்போமா?"—என்று நிதி அமைச்சர் சொன்னுல்கூட நாம்ஆச்சர்யப்படமாட்டோம்!

✱



## முல்லை - சத்தி

அந்திக் கதிரவனின் கடைசிகதிர்கள் பட்டு—அந்த நந்தவனத்திலிருந்த வண்ண மலர்களெல்லாம் விண்ணகத்து தாரகைகள் போல் ஒளிசிந்திக் களிநடனம் புரிந்து கொண்டிருந்தன. தென்றல் தெம்மாங்கு பாடிக் கொண்டே மலரின் மணத்தை மொண்டு மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் தொண்டு செய்து கொண்டிருந்தது, காலை முதல் மாலைவரை வேலையின் தொல்லைகளில் திளைத்திருந்த மக்கள், சிறிது ஓய்வுபெற அந்தமலர்க்காட்டைவட்டமிட்டிருந்தனர். இளம் காதலர்கள், புது மணதம்பதிகள்—இளஞ்சிட்டுகள் வயோதிகர்கள்-முதலாளி, தொழிலாளி-இன்னும் பலரும் கூடியிருந்தனர், அந்தக் குளிர் சோலையில்!

இயற்கை அன்னை தன் மக்களுக்கு வாரி வழங்கும் எழிற் காட்சிகளை கண்டு களித்த வண்ணம் நான் ஓர் மூலையில் அமர்ந்திருந்தேன். ஒரு முடவனை-இரண்டு கால்களும் இல்லாத துர்பாக்கியசாலியை-இரண்டு சக்கரங்கள் பொருந்திய வண்டியில் வைத்து தள்ளிக்கொண்டு வந்தாள் ஒரு தளிர் மேனியாள். சோகத்தின் கோர வடுக்கள் அவர்கள் இருவர் முகத்திலுமே காணப்பட்டன. அவளோ-அழகுச் சிலை! வானவில்லின் வர்ணஜாலங்களெல்லாம் அவளின் மேனி எங்கும் தன் ஆதிக்கத்தை செலுத்தியிருந்தது. அஜந்தா ஓவியமோ—கவிஞர்களின் காவிய காரிகையோ-உயிர்பெற்று உலாவ வந்த நிலவு நங்கையோ-என்று ஐயுறும் அளவு எழில் நிரம்பிய ஏந்திழையாள். பருவத்தின் பூரிப்பு அவளின் அங்கங்களில் பிரதிபலித்தன. அந்த கெண்டை விழியாள் ஒரு நொண்டிக்காவாழ்க்கைப்படவேண்டும்? முடவனுக்கு கொம்புத்தேனே கிடைத்துவிட்டதே! ஆச்சரியத்துடன் அந்த விசித்திர தம்பதிகளை பார்த்துக் கொண்டிருந்தேன்.

'என்னுங்க! அவங்களையே பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே' என்று கேட்டபடியே ஒரு வாலிபன் என் பக்கத்தில் வந்தமர்ந்தான்.

"ஆமாம்! அந்த விசித்திர இணைப்பு எனக்கு புரியாத புதிராக இருக்கிறது......கண்ணில்லாத கபோதியிடத்தில் சிக்கிய அழகு ரோஜா அவள்."

"உம்! அந்த ரோஜாவைப் பெற என்ன விலை கொடுத்திருக்கிறான் அவன், தெரியுமா?"

"பொன்னும், மணியும், மின்னும் வைரத்தையும் அவளின் எடைக்கு எடைக் கொடுத்தானோ அந்தக்காதகன்? .பிறவி முடவனை மணப்பதற்கு இந்த மலர்முகவதி எப்படித்தான் சம்மதித்தாள்?"

"எட்வர்ட் மன்னன், சிம்சன் வேலஸ்சுக்காக இழந்தானே தன் பரந்த சாம்ராஜ்யத்தை, அதைவிட உயர்ந்தது...இவன் அவளின் காலடியில் செலுத்தியக் காணிக்கை! பிறவியிலே முடவனல்ல அவன்; உணர்ச்சி வேகத்தில்—ஒரு க்ஷண நேர இன்பத்திற்காக—ஆத்திரத்திரத்திற்கு அடிமைப் பட்டதால் பாசத்திற்கு பரிசாகத்தந்தான் அவனின் கால்களை..."

"என்ன!" ஆச்சரியத்தால் நான் ஸ்தம்பித்துப் போனேன்.

"ஆமாம்! நண்பரே! இரத்தம் சொட்ட —,சொட்ட தன் இரண்டு கால்களையும் அந்த அழகு தெய்வத்தின் காலடியில் காணிக்கையாக செலுத்தியிருக்கிறான். தலையைக் கொடுத்தேனும் காதலில் வெற்றிபெறுவேன் என்று கலதக்கிறார்களே சிலர், அந்த வகையைச்சேர்ந்தவன் அவன். காதலில் வென்றான் தன் கால்களை இழந்து!

**...'அந்தக் கெண்டை விழியாள் ஒரு நொண்டிக்கா வாழ்க்கைப்பட வேண்டும்? ஆமாம்; அந்த முடவனுக்குக் கொம்புத் தேனே கிடைத்து விட்டது!...**

அந்த சோகக் கதையை-புதுமைக் காதலர்களின் வரலாற்றை—கூறுகிறேன் கேளுங்கள்."

★

அதோ-தெரிகிறதே கல்லூரி, அங்கேதான் இரண்டாண்டுகளுக்குமுன் படித்துக் கொண்டிருந்தனர் செல்வமும்—சேகரும். இருவருமே இருதுருவங்கள், செல்வத்தில்! ஆனால் இணைபிரியா நண்பர்கள். சேகர்—சீமான்வீட்டு செல்லப்பிள்ளை. செல்வம்-பெயர் தான் செல்வம் — அவனுடைய செல்வமெல்லாம் ஒரு குடிசையும் அவனின் ஆசைத் தாயும் தான்!


தோழமைக்கு எடுத்துக் காட்டாக செல்வம்-சேகரின் நட்பைப் பற்றிதான் மற்றமாணவத் தோழர்கள் சொல்லுவார்கள். காலையில் கல்லூரியில் காலடி எடுத்து வைத்து விட்டால் மாலை வரை இருவரையும் தனித்துப் பார்க்க முடியாது. தென்றல் வீசிக் கொண்டிருந்த அவர்களின் வாழ்வில் புயல் நுழைந்தது ஒரு பூவை உருவில். அவள் தான் சித்ரா! மாணவத் தோழர்களின் சிந்தையைக் கவர்ந்த காந்தச்சிலை. பலரும் போட்டியிட்டனர் அவளின் அன்பைப் பெற'...கிட்டாதாயின் வெட்டனமற' என்று வேதாந்தம் பேசினர் சிலர். 'சீச்சீ; இந்தப் பழம் புளிக்கும்' என்றனர் பலர். "நமக்கேன் இந்த வம்பு ஒழுங்காக படித்துப் பட்ட பெற்று வெளியே சென்றால்தா என் வாழ்க்கைக்கு ஒரு வ செய்துக் கொள்ள முடியும் உழைத்து, உழைத்து உருக்குலை விட்டாள் என்தாய் ... இனிமே வது குடும்ப பொறுப்பை நா ஏற்றுக் கொள்ள வேண்டாம காதல்செய்யவா இது நேரம்-க மையை செய்யவேண்டும்" என் பேசிக் கொண்டிருந்த செல்வ தான் அந்த சேல்விழியாளின் தையில் குடி ஏறினன். 'சித்ரா ந முடன் ஒரு வார்த்தை பேசமா டாளா; நம் களிதீராதா'—என் எண்ணி—எண்ணி—ஏங்கித் தவி துக் கொண்டிருந்த மாணவ கூட்டத்திலே-சித்ரா-அந்த பேசு பொற்சித்திரம் செல்வத்திட வலிய—வலிய சென்று பேசுவா சேகரின் உள்ளத்தில் பொறாமை தீ கொழுந்து விட ஆரம்பித்த செல்வம்—சித்ராவின் நட்பு வள வளர சேகரின் பொறாமைத் தீ அனல் கக்கியதில் ஆச்சரிய என்ன?

"ஏழைக்குஏன் காதல்? அ பணக்காரரின் ஏக போக உரிமை மாடி முற்றத்திலே நிலாசோ சாப்பிடும் செல்வந்தர்களி மடியை தேடிச் செல்லும் காத ...குடிசையிலே கஞ்சிக்கு க யத்தை ஏந்தி நிற்கும் ஏழ காதலை நாடிச்சென்றால்...காத கிடைக்காது; சாதல் தான் கிடை கும்" என்றெல்லாம் பேசி கொண்டிருந்த செல்வத்தி இதய கோயிலின் கதவுகள் சித் வுக்கு திறக்கப்பட்டன. முத்து பல் காட்டி முறுவலித்த வ ணம்—தித்திக்கும் தேன் மொ யால் காதல் பண் இசைத்து கொண்டே...சித்ரா நுழைந்தா கதவுகளும் மூடிக்கொண்டன.

வாழ்க்கை என்ற மரத்திலிரு காலம் என்ற மலர்கள் உதிர் கொண்டிருந்தன. அன்புச் சங்கி யால் பிணைக்கப்பட்ட சித்ராவு செல்வமும் ஜோடிப் புறக் போல கல்லூரியை வலம் வ னர். வண்ணப்பூங்கா அவர்களி எண்ணங்களை பரிமாறிகொள் உதவியது. தென்னஞ்சோலை அவர்களின் இன்பக் கூடார

★ தொடர்ச்சி 8-ம் பக்க






பெண்: அன்புள்ள காதலரே.!

ஆண்: யார் ?

பெண்: யாரா? தெரியவில்லையா ன்னை ?...உங்கள் திருமுகத்தைக் காண வ்வளவு நேரமாய்க் காத்திருக்கிறேன்!

ஆண்: வராதே என்று எத்தனை றை சொல்வது ?

பெண்: ஏன்...என்னைப் பிடிக்க ல்லையா ?

ஆண்: ஆமாம் !

பெண்: உமக்கென்ன பைத்தியமா! ற்று இரவெல்லாம் என்னை ஆரத் ழுவியபடி கிடந்தீரே...

ஆண்: அதற்கென்ன இப்போது — ன் அழைத்தால் வா—போ !

பெண்: சரிதான். தேவைப்பட்டால் வேண்டிய தேவமாதுவா நான் ?

ஆண்: தேவாமிர்தமாயிரேன் — இப் ாது தேவையில்லை.

பெண்: அந்த அமிர்தத்தையும் தோற் டிக்கும் என்றீர் என் அதரபானம்! கற் னகள் ஊறுகின்றன என்றீர் என் கன் த்தைத் தடவியபடியே! காவிய ளிகை எழுகின்றது எனக் கதைத்தீர் ன் காந்தள் விரல்களை ஸ்பரி த்தபடியே! கவிதை மழை ாட்டுகிறது எனப் போதை ாழியில் புகன்றீர் — 'கருத் க் குவியலே! எண்ணப் தையலே! கனியே! தேனே! வா' என வாயார ழைத்து, அணைத்து, அமளி குலவினீர்! வேயாமாடத் ஓயா இன்பம் பெறு ாம் என்றீர்! வேணுகான —வீணை நாதமே—என்று ணித்தீர்! அப்படியெல்லாம் ாரங்கள் பூட்டிய நீரா று அதிகாரத்துடன் விரட் றீர்? காதலரே... எல்லாம் டிலறைப் பேச்சுத்தானு?

ஆண்: கட்டிலறைக்கா வந் க்கிருய்;கண் உதிர்ந்தவளே! ருகப் பார்... இது கட்டி றையா? காராக்கிரகத்தின் லறையடி!

பெண்: ஆமாம்-இந்த அறை என்னைத் தவிர உமக்கு பமான பொருள் ஏது ரயே! — வாரும். சிணுங் கொண்ட பாம்புகள் போலப் பின்னிக் கொள்வோம்...ஏன் தயக்கம்?

ஆண்: ...பேசாதே!

பெண்: கனியே வருகிறது—சுவைத்திட மறுக்கிறீர். மலரே வருகிறது — நுகர்ந்திடேன் என்கிறீர். இன்பமே வருகிறது—எட்டி நில் என்கிறீர். நீர் அதிசயமான கிள்ளை — புதுமையான வண்டு— விசித்திரமான மனிதர்.

ஆண்: இப்போது நீ என்னதான் சொல்லுகிருய்...?

பெண்: எதைச் சொன்னுல் நீர் ஆசையோடு கேட்பீர்?...சங்கீத மொழி பேசும் உம் குழந்தைச் செல்வங்கள், "அப்பா எப்பவரும் ஆத்தா?" என்று உமது தாயாரிடம் சிணுங்கி அழுவார்களே; அதைச் சொல்லவா?

ஆண்: அய்யோ—போதும் நிறுத்து!

பெண்: தலையணையைக் கண்ணீரால் குளிப்பாட்டும் உம் மனைவியின் நிலையைச் சொல்லவா? அதைக் கேட்பீரா?

ஆண்: வேண்டாமடி வேண்டாம்!

பெண்: பிறகென்ன; பழைய நினைவுகளைச் சொல்லட்டுமா? உமது முதல் மனைவி பத்மா-"கடைசியாகத் துடிக்கும் என் உதட்டில் ஒரு முத்தம் கொடுங்களத்தான்" என்று கேட்பதற்குமுன் பெற்றுக் கொண்டாளே...அதை...

ஆண்: அய்யோ......வேண்டாம்— நீ போயேன்!

பெண்: உமது குடும்பத்தார்—தாய், மனைவி, சகோதரிகள்...குழந்தைகள் — உழுவலன்பு பூண்ட நண்பர்கள்.... உமது நலமே தன்னலமாய்க் கொண்டிருந்த தந்தை...

ஆண்: சொன்னுல் கேள்! போதும் நிறுத்து!

பெண்: இதெல்லாம் பிடிக்காவிட்டால் உமக்கு மிகவும் இனிப்பான சேதி சொல்லுகிறேன்; இந்த நாடு இருக்கிறதே-இது ஒரு அடிமை பூமி. இதை விடுவிக்க உண்மையான தொண்டர்களும், நேர்மையான தலைவர்களும் எத்தனைபேர் வேண்டும் தெரியுமா?

ஆண்: அய்யோ-என்னை விடேன்!

பெண்: முடியாது—இந்த முத்தங்களைப் பெற்றுக்கொள்ளும்.

ஆண்: விடு என்னை-உன் கரம் அக்கினிக் கட்டையாயிருக்கிறது! உன் முத்தம் முள்ளாகக் குத்துகிறது.

பெண்: நேற்று?

ஆண்: அதை மறந்துவிட்டேன்.

பெண்: போன வாரம்?

ஆண்: அதையும் மறந்து விட்டேன்.

பெண்: போன மாதம்....?

ஆண்: எல்லாவற்றையுந்தான்! தயவு செய்து நீயும் மறந்து தொலை போ!

பெண்: அய்யா கோவலரே! நாம் இருவரும் மறந்துவிடலாம். ஆனுல் என்வயிற்றிலே வளரும் ஒவியத்தை யார் மறப்பது? அது நம் உறவை வெளியிலே சொல்லித்தான் தீரும். பல இரவுகள்-பல பகல்கள் நாம்பாடிய காதல் கீதத்தின் அற்புதமான அடையாளம் அடியாளின் வயிற்றில் வள

● தொடர்ச்சி 10-ம் பக்கம்



## புதுமைக்......

★ 6-ம் பக்கத் தொடர்ச்சி

வெள்ளி மணற்பரப்பில் கள்ளமில்லா புள்ளிமான்களைப் போல் துள்ளி விளையாடினர். காதல் வானத்தில் உயர உயரப் பறந்து கொண்டிருந்த அந்த வானம்பாடிகளுக்கு சேக்ஸ்பியரின் ரோமியோவும் ஜூலியட்டும்-பாரசீகத்து லைலாவும் மஜ்னுவும் — பாரதிதாசனின் பொன்முடியும் பூங்கோதையும் துணை புரிந்தனர்.

சேகரின் உள்ளம் எரிமலையாகி விட்டது. சித்ரா—சேகருக்கு சொந்தமாவதா? கூடாது... கூடாது! எப்படியும் துண்டித்தே ஆக வேண்டும் அவர்களின் காதலை...!சேகர் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டான். படிப்படியாக சேகர் செல்வத்தின் தொடர்பை குறைத்துக் கொண்டான். பாவம், செல்வத்திற்கு இந்த மாற்றம் புரியவே இல்லை. நாளடைவில் இருவரும் இரு முனைகளாகி விட்டார்கள்!

சதி உருவாகிக் கொண்டேயிருந்தது சேகரின் உள்ளத்தில்.

அந்தநாள்!...கல்லூரியின் மாடியிலே சித்ராவும்-செல்வமும் சிரித்து-சிரித்து பேசிக்கொண்டிருந்தனர்.

,,சித்ரா! என் சிந்தையைக்கவர்ந்தவளே! கல்லூரி வாழ்வு முடிவடையப் போகிறது. இனி...''

''என் இதயமே! இனி என்ன? இன்ப வாழ்வு துவங்கப் போகிறது... ஒன்றின் முடிவு மற்றொன்றின் ஆரம்பமல்லவா?''

''என் உயிரே! உள்ளம் மகிழ-நெஞ்சு நெகிழ—இன்பச் செய்தி சொன்ன என் கள்ளமில்லா வெள்ளிநிலவே! என் இன்பப் பேழையே! முத்து — முத்தாக இன்பச் செய்தியை உதிர்த்த உனக்கு முத்தாரம்தான் பரிசளிக்க வேண்டும்! பைங்கிளியே! பசும் பொன் மேனியாளே! கன்னற்சாறே! நீ இதழ்விரித்து சிரித்த போது வாய் நழுவிய முத்துக்களை எடுக்கவா? கோர்க்கவா?''

''உண்மையிலேயே,முத்துக்கள் வாங்கும் அளவுக்கு உங்கள் செல்வநிலை உயர்ந்து விட்டதா?

''பணம் எதற்கு? என் கனத்த உதடுகள் போதுமே உனக்கு முத்தாரம் பரிசளிக்க...''

''இச்!''

''முத்தாரம்...சித்ரா! ஒரு முழ முல்லைச்சரம் வாங்கித் தர கையாலாகாதவனை காதலிக்க உனக்கு வெட்கமாயில்லை'' என்று வார்த்தைகளை வீசிய படியே—கோபம் கொப்பளிக்க வந்தான் சேகர்!

''சேகர்! இதில் வெட்கப்பட வேண்டியது என்ன இருக்கிறது...?'' சித்ரா முணு முணுத்தாள்.

''சித்ரா! உன் கடைக்கண்ணை என் பக்கம் திருப்பு! முத்தாரமும் வைரமாலையும்—உன் காலடியில் குவிக்கின்றேன்! வானத்து விண்மீன்களை மாலையாக்கி உனக்கு சூட்டுகிறேன்-உன்முகிற் கூட்டத்தில் நிலவை பிடித்து வந்து சிறை வைக்கின்றேன்! ஒரு புன்னகை போதும்—இந்த பூவுலகத்தையே உனக்கு காணிக்கையாக்குகிறேன் — உல்லாச புரியில் சல்லாபம் செய்வதை விட்டு ஏன் இந்த உதவாக்கரையை நாடி ஓடுகிருய்? அரண்மனைபோன்ற என் மாளிகையிலே-அம்சதுளிகா மஞ்சத்திலே அரசோச்ச வேண்டிய நீ, இந்த ஏழையின் குடிசையில் குமுறுவதா? வேண்டாம் சித்ரா; வேண்டாம்!'' பட பட வென்று பொறிந்து தள்ளினுன் சேகர்.

செல்வத்தின் சிந்தையை சம்மட்டியால் அடிப்பதுபோல் இருந்தன, அவனின் ஒவ்வொரு வார்த்தையும். செல்வத்தின் கண்கள் சிவந்தன...''சேகர்! பணத் திமிரால் உளருதே! பண்பு கெட்டவனே! உன்னிடத்திலே பணம் குவிந்து கிடக்கலாம்... மாளிகை—மலர்வனம்— மந்தகாச வாழ்வு எல்லாம் கிடைக்கும் உன்னை மணந்தால்! ஆனுல் என்னிடத்தில்—பண்பு இருக்கிறது—குணம் இருக்கிறது—அன்பு இருக்கிறது—அவளுக்காக எதையும் செய்யும் நல்ல உள்ளம் இருக்கிறது—என் உயிரையும் இழப்பேனேதவிர, அவளை இழக்க மாட்டேன்......''உணர்ச்சி வசப்பட்ட செல்வம் சீறினுன். அடிபட்ட நாகம் போல ஆத்திரத்தால் அவனின் அங்கங்களெல்லாம் நடுங்கின. சித்ரா மெய்மறந்து நின்றிருந்தாள். பாம்பாட்டி படமெடுத்து ஆடும் பாம்புக்கு கோபம் மூட்டி கொத்தச் செய்வதைப்போல சேகர் செல்வத்தின் கோபக் கனலை கிளறினுன்.

''செல்வம்! தடுக்குத்தனமாகப் பேசாதே! அடுக்கடுக்காக வார்த்தைகளை குவிக்காதே! இந்த அழகுச் சிலைக்காக உயிரையும் விடுவேன் என்று கதை அளக்கிருயே; எங்கே உன் கை வரிசையைக்காட்டு...!இந்த மாடியிலிருந்து கீழே குதிக்க உனக்கு நெஞ்சிலே உரம் இருக்கிறதா? உயிரை விடுகிருனும்...! சித்ராவை நீ காதலிப்பது உண்மையானுல் இந்த மாடியிலிருந்து கீழே குதி—பின் நான் உனக்கு போட்டியாக வருவதில்லை—அவளுக்காக எதையும் செய்வேன் என்ருயே, இச்சிறு செயல் போதும்—உன் உண்மை உருவத்தை உலகம் அறிந்துவிடும்'' சொல்லிக் கொண்டே இருந்தான் சேகர்.

காதல் வெறியில்—உணர்ச்சி போதையில் தன் நிலை மறந்திருந்த செல்வம் ஆத்திரத்தோடு ஒரு முறை சேகரைப்பார்த்தான்-வேதனையும், வாட்டமும் வட்டமிட்டுக் கொண்டிருந்த சித்ராவின் வதனத்தைப் பார்த்தான் - இந்தப் பூசலை கவனித்தபடி குழுமிநிற்கும் மாணவர் கூட்டத்தைப் பார்த்தான்—மாடியிலிருந்து பாய்ந்தான் பூமியை நோக்கி...

''ஐயோ! என் செல்வமே'' என்றலறினுள் அந்த அபலை. இரத்த வெள்ளத்தில் மிதந்தான் செல்வம்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட செல்வத்தைக்கண்ட சித்ரா 'கோ'வென்று கதறினுள். செல்வத்தின் கோர நிலைகண்டு சேகர்கூட பதறிவிட்டான். தன் சொத்துக்களில் ஒரு பகுதியைக் கொடுத்தாவது செல்வத்தைமீட்க படாதபாடுபட்டான். சென்னையிலிருந்து திறமையான டாக்டர்களெல்லாம் வந்து பார்த்தனர். பாவம்; என்ன பயன்? நெஞ்சு நிமிர்ந்த அந்த ஏறுநடைக்காரன் கால்கள் இரண்டையும் பறி கொடுக்க வேண்டுமென்று டாக்டர்கள் முடிவுக்கு வந்தனர். முறிந்த இரண்டு கால்களையும் வெட்டிவிட்டார் டாக்டர். இல்லையென்ருல் புரையோடி உயிருக்கு ஆபத்தாகியிருக்கும். உடல் முழுதும் ரணம். ஒருமாத காலம் நினைவிழந்திருந்தான் செல்வம்...

தன் நினைவடைந்ததும் அவன் கூறிய முதல் சொல்: 'சித்ரா! உன் மேல் நான் கொண்ட காதலை—என் அன்பை உலகறியச் செய்து விட்டேன்! என் உயிரே...;என்னை ஏற்றுக் கொள்வாயா?'

''அத்தான்...இந்த நீள்வையகம் நீங்கள் செய்த தியாகத்திற்கு இணையாகாது! உங்கள் காதலை வெளிப்படுத்த உயிரையா பணயமாகவைப்பது? என்னுல்ஏற்பட்ட இந்த இன்னலுக்கு நான் என்ன பிராயச்சித்தம் செய்யப் போகிறேன்! என் கண்களிலே உங்களை வைத்து காப்பாற்றுவேன் கண்ணுளா!'' என்று கண்களில் நீர் வடிய-வடிய விம்மினுள் சித்ரா!

இரண்டொரு மாதங்களில் செல்வம் குணமடைந்து வந்தான். செல்வமும் சித்ராவும் மணம் புரிந்து கொண்டனர். அவள் உழைத்து இந்த உத்தமனுக்கு உணவளிக்கிருள்! பெண்ணின் அன்புக்காக தன் வாழ்வையே அர்பணித்துவிட்ட அப்பாவி— உணர்ச்சிகளுக்கு அடிமையாகி அவனியில் முடமாக உலவுகிருன். சுவர்வைத்துதான் சித்திரம் எழுத வேண்டும் என்ற வாழ்க்கை தத்துவத்தின் முதல் அடியை உணராத உன்மத்தன்! கண்களை விற்று ஓவியத்தை வாங்குவது? ''செகத்தீரே காதல் செய்வீர்'' என்று தான் பாடிச்சென்றனர்..''காதலின்முன் தன் வீரத்தைக் காட்ட உயிரை விடுவீர்'' என்ரு பாடினர்? போர்க்களத்திலே புயல்போல் பொங்கி எழுந்து, புலியென சீறி பகைவர்களை சாடும் வீராதி வீரர்கள்-தீராதி தீரர்களும் — தையலின் மையலில் சிக்கி சீரழிகிருர்கள்...கடமையை மறந்து காதலுக்கா முதலிடம் அளிப்பது? செல்வத்தை எடுத்துக் கொள்ளுங்கள்—தன் வயோதிகத் தாயை மறந்தான்—காதலுக்காக தன் கால்களை பலியாக்கினுன் — சித்ரா உத்தமி — அவனை மணந்தாள். ''முடவனுக்கு மாலையிட மாட்டேன்'' என்று ஓடி ஒளிந்து கொண்டிருந்தால் இவனின் கதி என்னுவது? கால்களை இழந்த அவன் கதறி-கதறி அழுது—அணு அணுவாக செத்துக் கொண்டிருப்பான் அல்லவா?''

அந்த வாலிபன் பேச்சை நிறுத்தினுன்...''காவியங்கள் காதலர்களின் கோரமுடிவை சொல்லியிருக்கின்றன...சரித்திரங்கள் சரசவல்லிகளுக்கா சாம்ராஜ்ஜியங்கள் சாம்பல் மேடாகியதை கூறியிருக்கிறது...ஆனுல் காதலுக்காக கால்களை பலியாக்கிய கதையை இன்று தான் கேள்விப் படுகிறேன்... இதை என்னுல் நம்பவே முடியவில்லை...''

''என்னுங்க! கால்களை இழந்து கைவண்டியில் ஊர்ந்து செல்கிருனே அவன்தான் செல்வம்...... அந்த வண்டியை உருட்டிச் செல்கிருளே அவள் தான் சித்ரா... இவ்வளவும் எனக்கு எப்படித்தெரியும் என்கிறீர்களா? நான்தானே அந்த விசித்திர நிபந்தனையைப் போட்டவன்... இப்போதாவது நம்புகிறீர்களா, காதல் ஒரு போதை! அதில் சிக்கிச் சீரழியாதவர் இந்த ஜெகத்தில் யாருமே இல்லை! உண்மை தானே? அந்தப் புதுமைக் காதலர்களின் சோகக் கதை என் சிந்தனையை கிளறிக் கொண்டிருந்தது. சந்தேகங்கள்பல எழுந்தன. அதை வினவ வாலிபன் பக்கம் திரும்பினேன். அவன் அங்கில்லை. அவன் உட்கார்ந்திருந்த இடத்தில் ''முல்லை'' என்ற மாத இதழ் இருந்தது. அதை எடுத்துப் பிரித்தேன். முதலில் என் கண்களில் பட்டது எது தெரியுமா? ''புதுமைக் காதலர்கள்'' சிறுகதை, தீட்டியது ''சேகர்''....கதையும்-பெயர்களும் கற்பனையே'' என்பது தான்!

★

# விதவைகளா நாம்?
# விமோசனமில்லையா, நமக்கு

வயலில் விளைந்ததை—ஆலைகளில் உற்பத்தியானதை— சந்தைக்கு கொண்டுவர; வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய; ஒழுங்கான முறையில் அமைந்த சாலைகள் இன்றியமையாதன!

இதோ, தென்னகத்தின் சாலைப் பெருக்கத்தைப் பாருங்கள்!

முதல் 5-ஆண்டுத் திட்டத்தின் படி சுமார் 9-கோடி ரூபாய்கள் போக்குவரத்திற்காக செலவிடப்பட இருக்கின்றன.

இந்த 9-கோடி ரூபாய்களில் 91 சதவிகிதம் அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, மே. வங்காளம், பம்பாய், உத்தரப் பிரதேசம், ஆகிய மாகாணங்களுக்கே செலவு செய்யப்பட இருக்கின்றன.

பி. பிரிவு மாகாணங்களில் திரு-கொச்சிக்கு 0·42 கோடி ரூபாய்கள் தான் சேருகின்றன.

9 கோடி ரூபாய்களில் நாற்பத்திஇரண்டே லட்சங்கள் தான் நமக்கு!

இருக்கலாமா இந்த ஏற்ற பேதம்?

'முரசொலி'

சந்தா விபரம்


**உள்நாடு-இலங்கை**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 6-0-0 |
| 6-மாத சந்தா | 3-8-0 |

**வெளிநாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 7-0-0 |
| ஆறுமாத சந்தா | 4-0-0 |

மூன்று மாத சந்தா கிடையாது.




# ★★★ விடுதலை! விடுதலை!! ★★★

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

"இருபதாம் நூற்ருண்டு-நல்ல காலம்—நாகரீகத்தின் உச்சி நேரம் என்றெல்லாம் சொல்லுகிருர்களே, இப்போதும் உலகிலே சில நாடுகள், மற்ற நாடுகளை அடிமைப் படுத்துவதில் மகிழ்ச்சி அடைகின்றனவே, ஏன்?"—இப்படி ஒரு அருமையான கேள்வியை அனுப்பியிருக்கிருன் தேனீத் தம்பி சேகர்.

அத்தகைய நாடுகள் பூகோளப் படத்திலே மாசுபடிந்த கரும் புள்ளிகள்! அந்த மகிழ்ச்சியும் வீழ்ச்சியின் முதல்படியே! அவைகளின் காலடியில சிக்கித் தவிக்கும் நாடுகளும் எப்போதும் விடுதலை பெறவே துடிக்கும்!

ஒரு நாடு மட்டுமல்ல; அப்படி விடுதலை பெறத் துடிக்கும் ஒரு உயிரின் நிலை இருக்கிறதே,... அப்பப்பா! அது படும் பாடு..சொல்ல முடியாதது! துடிக்கும்; துவளும்; தத்தளிக்கும்; தடுமாறும்! ஆனால்—கடைசியில எரிமலையைப் போல் வெடித்தே விடும்.

அப்படி விடுதலைக்காகத் தவித்த—பாவம்; ஒரு பச்சைக்கிளியின் கதையை இவ்வாரம் படியுங்கள்:

★ ★

"வாங்க; வந்து பாருங்க;
பச்சைக்கிளி வாங்குங்க!

கொச்சை மொழி பேசிடும்
கொண்டைக்கிளிவேணுமா?

கொவ்வைப்பழம் கொத்தியே
கொஞ்சும் கிளி வேணுமா?

தெருக் கோடியிலிருந்து எழும்பியது இந்தக் குரல். மப்பும் மந்தாரமுமாக இருந்த வானத்தில்—கண்ணைப் பறிக்க காட்சி தந்த வானவில்லை ரசித்துக் கொண்டிருந்த செல்வம் திடுக்கிட்டான். திரும்பிப்பார்த்தான். ஒரு காட்டுக் குறவன் வந்துகொண்டிருந்தான். அவன் கையிலே கிளிக்கூண்டுகள்-உள்ளே சிறைபட்ட பச்சைக் கிளிகள்! யாருக்கும் சொந்தமில்லாத அவைகளை விற்றுக்கொண்டு வந்தான் அவன்.

அதைப் பார்த்ததும் செல்வத்தின் மனதிலும் 'பொல்லாதஆசை' தோன்றிவிட்டது. உடனே 'விடுவிடு' என்றுவீட்டிற்குள் ஓடினன். அப்பா, அம்மாவிடம் அந்த ஆசையைச் சொன்னன். 'எதற்கடா இந்த தொல்லை?' என்ருர் அப்பா. 'கிளியைக் கூண்டிலடைப்பது பாபமாயிற்றே!'-இது அம்மாவின் வாதம். ஆனல் இதற்கெல்லாம் அடங்கி விடுபவனு செல்வம்? வழக்கமாக அவன் பிரயோகிக்கும் பாணம் இருக்கிறதே. அதுதான் 'அழுகை' அதைஆரம்பித்தான் அப்புறமென்ன? பிடிவாதம் பலனைத் தந்துவிட்டது. குறவனின் கையில் பத்து ரூபாய் நுழைந்தது. செல்வத்தின் வீட்டிற்குள் ஒரு கிளிக்கூண்டு நுழைந்தது.

கூண்டை தன் அறையிலேயே மாட்டிக் கொண்டான் செல்வம். அதற்குப் பாலும் பழமும் கொடுத்தான். பாசமுடன் பக்கத்திலேயே நின்ருன். ஆனல்......ஆனல்...... அந்தப் பச்சைக்கிளி பழத்தைப் பார்க்கவில்லை; பாலையும் பருகவில்லை. கூண்டில் ஒரு மூலையில் சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டது. அதைக் கண்ட செல்வத்தின் மனம் கவலைப்பட்டது.

கூண்டிற்குப் பக்கத்தில் நின்று 'கீ...கீ' என்று கத்துவான். கிளியும் திரும்பிக் கத்தும் என்று எதிர்பார்ப்பான். காத்திருப்பான். கிளி ஊமையாகவே இருக்கும். ஆனல் அதே சமயம் தோட்டத்திலிருந்து ஏதேனும்கிளியின் குரல்கேட்டால் பதிலுக்கு கூண்டுக்கிளியும்கத்தும். இறக்கைகளை படபட வென்று அடித்துக் கொள்ளும். பறக்கத் துடிக்கும். முடியுமா?—மீண்டும் சிலையாகவே உட்கார்ந்து விடும்.

கிளியின் போக்கு செல்வத்திற்குப் பெரும் வேதனையைத் தந்தது. இப்படியே இரண்டு நாட்கள் சென்று விட்டன.

மூன்ருவதுநாள். எப்படியாவது இன்ருவது கிளியைச் சாப்பிட வைத்து விடவேண்டும் என்று முடிவுசெய்தான் செல்வம். முயன்ருன். வழக்கம் போல்தான் பலன் கிடைத்தது. கிளி செல்வத்தைப் பார்க்கவில்லை; ஆகாயத்தில் கூட்டம் கூட்டமாகப் பறந்து சென்ற கிளிக்கூட்டத்தை ஜன்னல் வழியாகப் பார்த்தது. பார்த்துக் கொண்டேயிருந்தது.

செல்வத்திற்கு அழுகையே வந்துவிட்டது. "கிளியே! கிளியே! கொஞ்சம் சாப்பிடேன்!" என்ருன் பைத்தியத்தைப் போல. ஊ...ஹூ...ம்...!... கிளி திரும்பவேயில்லை. செல்வத்தின் கண்கள் கலங்கின. அவனுக்கு ஓரேவேதனை-சோகம்! என்ன செய்வது என்று யோசித்தான். ரேடியோவைத் திருப்பினன். மறுகணம் "விடுதலை! விடுதலை! விடுதலை!" என்று பாரதியாரின் பாடல் எழும்பியது. 'டக்' கென்று ரேடியோவைநிறுத்தினன். கையில் ஒரு புத்தகத்தை எடுத்தான். படுக்கையில் 'தொப்' பென்று சாய்ந்தான்!

சற்றுநேரம்சென்றது. தெருவில்

"வாங்க; வந்து பாருங்க;
பச்சைக்கிளி வங்குங்க...

என்ற அந்தக் குரல் கேட்டது. யாரது? காட்டுக் குறவனு? செல்வம் எழுந்தான். தெருவுக்குச் சென்ருன். குறவன்தான் சென்றுகொண்டிருந்தான் செல்வம் அவனிடம்ஓடினன். "குறவா! என்ன, நீ கொடுத்த கிளி ரொம்ப மோசமாயிருக்கே! சாப்பிடவே மாட்டேங்குதே!" என்ருன்.

குறவன் செல்வத்தைப் பார்த்தான். உற்றுப் பார்த்தான். ஏன்? அவன் எதற்காக அப்படி பார்க்க வேண்டும்? அதற்குள் அவனே பேச ஆரம்பித்தான். "அடடா! அப்படியா சாமி? உடனே என்னோடவா சாமி! ரொம்ப ரொம்ப ஜோரான கிளி தர்றேன்! அது பால் சாப்பிடும்; பழம் தின்னும்; ஆடும்;பாடும்; எல்லாம் செய்யும் சாமி!" என்ருன்.

அவ்வளவுதான். செல்வம் அவனுடன் நடந்தான். நடந்துகொண்டேயிருந்தான். இருவரும் ரொம்ப தூரம் நடந்து விட்டார்கள். ஊர் எல்லையையும் தாண்டி விட்டார்கள். செல்வத்திற்கும் பயம் தோன்ற ஆரம்பித்தது.

அதற்குள் அந்தக் குறவன் ஊர்க் கோடியில் இருந்த ஒரு பாழடைந்த மண்டபத்திற்குள் நுழைந்தான். அது பயங்கரமான மண்டபம்—மக்கள் நடமாட்டமில்லாதது! செல்வம் பயந்தான். மண்டபத்தில் அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்த வௌவால்களும், 'கர்...கர்' என்று அலறிய ஆந்தைகளும் அவன் பயத்தை அதிகமாக்கின. செல்வம் குறவனைப் பார்த்தான். "ஏய்! என்னை ஏன் இங்கே அழைத்து வந்தாய்? எங்கே கிளி?" என்ருன்.

குறவன் செல்வத்தை உற்றுப் பார்த்தான். அவன் கையிலிருந்த மோதிரத்தை—கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியை – எல்லாம் பார்த்தான். மறுகணம் "கிளியா? ஆசையைப் பார் ஆசையை! முதலில் கழட்டு மோதிரத்தையும் சங்கிலியையும்" என்ருன், முரட்டுக் குரலில்.

'ஆ' என்று அலறினன் செல்வம். அவன் கால்கள் நடுங்கின. மறுகணம் ஓட ஆரம்பித்தான். ஆனல் குறவனின் முரட்டுக் கைகள் அவன் கழுத்தை 'கப்' பென்று பற்றின. செல்வம் செய்வதறியாது விழித்தான். அவன் உடல் வியர்த்துக் கொட்டியது. குறவன் தன் இடுப்பிலிருந்து கத்தி ஒன்றை எடுத்தான். செல்வத்தின் முகத்திற்கு நேரே நீட்டினன். "பொடியனே! கத்தாதே! கத்தினல் குத்தி விடுவேன். நகைகளைத் தருகிருயா?...அல்லது...நானே..." குறவன் முடிக்கவில்லை. அவசர அவசரமாக நடுங்கும் கைகளால் நகைகளை கழற்றினன் செல்வம். அவனிடம் கொடுத்தான்.

மறுகணம் குறவன் 'ஹா..ஹா..' என்று சிரித்தான். செல்வத்தின் கையைப் பிடித்தான். 'பரபர' வென்று இழுத்தான. ஒரு அறையில் தள்ளினன். கதவை இழுத்துச் சாத்தினன்...தாழ்ப்பாளைப் போட்டான். போய் விட்டான்.

'ஐயோ!' என்று அலறினன் செல்வம். அந்தப் பாழடைந்த அறை அவனை பயமுறுத்தியது. அவன் தடுமாறினன். தத்தளித்தான். அறையின் சுவற்றில் இருந்த இரும்பு ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான். சுதந்திரமாகப் பறந்து கொண்டிருந்தன பறவைக் கூட்டம்! 'ம்மா...ம்மா' என்று கத்திக்கொண்டே தன் தாயைச் சுற்றி சுற்றி வந்தது ஒரு பசுங்கன்று! அவைகளைப் பார்த்த செல்வத்தின் கண்களில் நீர் ததும்பியது. 'ஐயோ...!அம்மா! அம்மா! நான் இனிமே உன்னைப் பார்க்கவே முடியாதா?...' என்று அலறினன். அறையின் கதவிடம் ஓடினன். 'படார்...படார்' என்று கைகளால் பலம் கொண்டமட்டும் அடித்தான். ஓங்கி ஓங்கி அடித்தான். 'ஐயோ! நான் என் வீட்டிற்குப் போகவேண்டுமே! யாராவது கதவைத்திறங்களேன்! திறங்களேன்!' என்று கத்தினன்; கதறினன். 'ஓ' என்று அழுதான்.

'திறக்க முடியாது...!' — அந்த சமயத்தில் இப்படிக் கேட்டது ஒரு குரல்!

யாரது? — செல்வம் திடுக்கிட்டான். சுற்றுமுற்றும் உற்றுப் பார்த்தான். யாரும் தென்படவில்லை.

'ஆமாம்; திறக்க முடியாது!... என்னைமட்டும் நீ பூட்டிவைத்தாய், அல்லவா? ஆகவே, நானும் திறக்கவேமுடியாது. படு... நன்ருகக் கஷ்டப்படு!... அழு...ஒப்பாரி வைத்து அழு!'—இப்படி மீண்டும் கேட்டது குரல்.

செல்வம் கண்களைக் கூர்மையாக்கிக்கொண்டான். மீண்டும் பார்த்தான். ஜன்னலில் உட்கார்ந்து கொண்டிருந்தது ஒரு கிளி! அவனது வீட்டிலிருந்த அதே கிளி!

செல்வம் திகைததான். 'கிளியே! கிளியே! நீதான் பேசினயா? ஐயோ, ஐயோ! கதவைத் [illegible]

★ தொடர்ச்சி 10-ம் [illegible]

★ தலையங்கம் தொடர்ச்சி

மக்களை மடமையில் ஆழ்த்தும் மதமா? காரல் மார்க்ஸ் அதை அபினென்று தூற்றியிருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாதே. அந்த மௌடீகத்தோடு மோதாமல் ஒதுங்கி நட—அப்படித்தான் அவர்கள் தங்கள் 'பாஷை'யை வகுத்துக் கொண்டனர்—உண்மையான கம்யூனிசத்திற்கே இப்போது குழி தோண்டி விட்டனர்!

இந்த பொதுக் காரணத்தைத் தவிர, கம்யூனிஸ்ட்களின் வீழ்ச்சிக்கு ஆந்திர மண்ணுக்கென அமைந்த தனிக் காரணமொன்றும் இருக்கிறது. பதவியே பிரதானமாய்—மயானம் ஏகுமுன்னர் மந்திரி நாற்காலியில் கடைசியாக ஒருமுறை உட்கார வேண்டியதையே ஜீவ மந்திரமாகக் கொண்ட கட்சி மாறிகளை—பிரகாசங்களை, தென்னேட்டி விசுவநாதங்களை, ஏனைய நடபாஷைக்காரர்களை ஆதாரமாகக் கொண்டு, கம்யூனிஸ்டுகட்சியும் பதவி வேட்டைக்கு ஆயத்தமானதை அவ்வளவு விரைவில் ஆந்திர மக்கள் எப்படி மறப்பார்கள்? எனவேதான் ஆணவக்காரர்களுக்குக் காட்டும் வழியை இவர்களுக்கும் காட்டி விட்டார்கள்.

இருந்தபோதும்கூட, எதிர்ப்பே இல்லாமல் ஆட்சிபீடம் ஏறும் காங்கிரஸ் கட்சி, இனியும் உருப்படியான காரியங்களைச் செய்து குவிக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இந்தத் தேர்தலை 'காங்கிரசின் பெரும் வெற்றி' என்று சொல்வதைவிட, 'கம்யூனிஸ்ட்களின் மகத்தான தோல்வி' என்றுதான் குறிப்பிடத் தோன்றுகிறது.

கம்யூனிஸ்ட் நண்பர்கள் தோல்வியால் துவண்டு போயிருக்கும் இந்த நேரத்திலே; கடந்த பொதுத் தேர்தலின்போது நாம் அவர்களிடம் நீட்டிய 'நேசக் கரம்' நம் நினைவிற்கு வருகிறது. அவர்கள் மட்டும், சற்று தணிவோடு திராவிட முன்னேற்றக் கழகம் நீட்டிய ஒப்பந்தச் சீட்டிலே கையெழுத்து போட்டிருந்தார்களேயானால், அவர்கள் நிச்சயம் தங்கள் கட்சி தென்னகத்தின் முன்னேற்றத்திலே கருத்து கொண்டிருக்கிறது என்கிற உண்மையை நிலைநாட்டியிருக்க முடியும்; மாஸ்கோவுக்கு அடுத்தபடி டில்லிதான் தங்களது தலைமை பீடம்—என்கிற பரிதாப நிலைமையையும் அகற்றியிருக்க முடியும்.

அவர்கள் அப்படிச் செய்ய மறந்தார்கள்; இப்போது அவதிப்படுகிறார்கள். தெலுங்குச் சீமையிலே அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற தோல்வி மட்டுமல்ல; இந்த நிலைமை மாறாமல் மாற்றிவைக்கப்படாவிடில் நாளை மலையாளக் கரையிலும் இந்தத் தோல்வி அவர்களைத் தொடருமென்பதை நம்மால் சொல்லிக் காட்டாமலிருக்க முடியவில்லை.

---

### கட்டாந்தரையில்......

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

[illegible] எழுதினார்கள். சந்திலே நீதியும் இருக்கிறது. [illegible] செய்தியும் [illegible] கட்டுக்கதை செய்கிறார்—ராஜதுரோகக் குற்றம் செய்[illegible]ல், அதுபனிச சமஸ்தானத்தில் இன்னும் பணப் பஞ்சம் பெறுகிறவர்கள் இருக்கிறார்கள் என்று [illegible]? இதோ, அந்த 'தினமணி' தரும் மற்றொரு சான்று.

புதடெல்லி, மார்ச் 3-1954ல் சுமார் 80 லட்சம் பிரயாணிகள் இந்திய ரயில்வேக்களில் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்திருப்பதாகவும், இவர்களிடமிருந்து அதிகக் கட்டணமாக ஒன்றரைக் கோடி ரூபாய் வசூல்செய்யப்பட்டதாகவும் இன்று பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. பிடிபடாமல் தப்பியவர்கள் எத்தனை பேர் என்பதைக் கணக்கிட முடியவில்லை.

பொருளாதாரத்துறை விரைவிலே மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்போருக்கு இந்தச் செய்தியை படித்துக் காட்டு.

கடைசியாக வேடிக்கையான ஒன்று; சென்னை அரசாங்கம் உத்தியோகங்களுக்குத் தேர்ந்தெடுப்பதற்காக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளில் [illegible] கேள்விகளில் [illegible] சில

"சர் வின்ஸ்டன் சர்ச்சில்—அமெரிக்க ஜனாதிபதி."

"பண்டித நேரு ஒரு பிரபல லேவாதேவிக்காரர்."

"நேருதான் எவரெஸ்ட் சிகரத்தை முதல் முதலில் எட்டிப் பிடித்த வீரர்"

"இமயமலையின் உயரம் 94—காடி மைல்"

"சர் சி. வி ராமன் இந்தியாவின் சேனாதிபதி."

"பட்டேல் இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதுவர்"

அ. இ கா. க. என்பது அகில இந்திய மாணவர் பயிற்சிப் படை"

"எம் பி. பி. எஸ். (டாக்டர் பட்டம்) என்பது மினரல் பிராட்காஸ்டிங் பம்பாய் சர்வீஸ்"

"வல்லபாய் பட்டேல் ஓர் உலகக்கவிஞர் அவர் அமெரிக்காவில் ஓர் மெம்பர்"

"இயேசு கிறிஸ்து காசி சர்வகலாசாலையில் கல்விகற்பதற்காக வந்தவர்"

பொது அறிவின் தரம் இவ்வாறிருக்க பொது உடமைவாதிகள் பொருளாதார முன்னேற்றம்தான் உடனடித் தேவை என்கிறார்களே! இதை நாம் எப்படி ஒப்ப முடியும்?

— பொன்முடி

---

### அவள்......

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

ருகிறது கண்ணுளரே! மறக்க முடியாது கதை! மறுக்கவும் முடியாது நீர்! உலகம் சொல்லத்தான் போகிறது அந்த உண்மையை!

எந்த வசதியும் நுழையக் கூடாதென்று தடைபோட்டுள்ள சிறைச்சாலைக்குள்ளே உம்மிடம் ஒரு பெண் மட்டும் ரகசியமாக வந்து போன விஷயம். ஒருநாள் அம்பலத்திற்கு வரத்தான் போகிறது!—நமக்குப் பிறக்கப் போகும் "குழந்தை" உம்மைப் பார்த்து "அப்பா அப்பா" என அழைக்கத்தான்போகிறது. அப்போது ஊரார் கேட்பர்; குழந்தையின் தாய் யாரென்று! நீரும் சொல்லுவீர்; தனிமையென்னும் தங்கக்கொடி பெற்ற தளிர்க்கொடி இதுவென்று!

ஆண்: சரி-சொன்னால் சொல்லுகிறேன்—நீ போ!

பெண்: உண்மையைச் சொல்லும் என்னைப் பிடிக்கவில்லையா?

ஆண்: உண்மையைசொல்லுகிறேன் — தெவிட்டுகிறது -சற்று விலகியிரு!

பெண்: முடியவே முடியாது!-

ஆண்: நான் போகிறேன்-

பெண்: எங்கே போகிறீர்-கதவு வெளியே பூட்டியிருக்கிறது. கவனமிருக்கட்டும்.

ஆண்: தூங்கப்போகிறேன்

பெண்: சரி - என் மடியில் சாய்ந்தபடி தூங்கும்.

ஆண்: அடா அடா அடா!...

பெண் ஹி ஹி ஹி...

வெற்றி; வெற்றி!......

★

---

### நொண்டி....

4-ம் பக்கத் தொடர்ச்சி

கழகங்கள், மற்ற நிலையங்கள் இவற்றிற்கு மானியம் கிடைப்பதையும், மற்றவைகள் மொழிப் பற்று, மாகாணப் பற்றுடன் கிடந்து வாடுவதையும் காண்கிறார்கள்.

#### முதல் கடமை

நிலைமை இது. இதை மாற்றுவது. திருத்த முயல்வது கடமையாக உள்ளது. உண்மையான குறைகள் இருந்தால் அவற்றைப் போக்கவேண்டும். பொய்யான பேச்சுக்களாக இருந்தால் புள்ளி விவரங்கள் எல்லாவற்றிற்கும் தந்து பொய் பொய்யெனக்காட்டி மக்களுக்குஅறிவூட்டுவது நல்லது. இவ்வாறு செய்யாமல்-குறைகளை போக்காமல் நொண்டி மாடாக வே நாட்டை விட்டிருந்தால் நல்லெண்ணம் குறையும். படை வல்லமையைக் காப்பதைவிட மக்களின் நல்லெண்ணத்தைக் காப்பதே முதல் கடமை; மக்களாட்சிக்கு அதுவே இன்றியமையாத கடமை. காக்கை பிடிக்கும் மாந்தரையும், பின்பாட்டுப் பாடும் பத்திரிகைகளையும் நம்பாமல், போற்றுமல் ஒதுக்கவேண்டும்; அவர்களிடமிருந்து நாட்டைக் காக்க வேண்டும். நாட்டு மக்களின் உரிமையையே பெரிதாகப் போற்றி அனைவர்க்கும் ஒத்த முன்னேற்றம் அளித்தல் வேண்டும்.

— "புதுயுகம்"

மலேயாவின் சுயேச்சை வாரச் செய்தி இதழ்; சிங்கப்பூர்.

24-2-55

★

---

### பிறைவானம்...

○ 9-ம் பக்கத் தொடர்ச்சி

வேன்... என்னை வெளியே விடேன்!' என்று கெஞ்சிக் கொண்டே ஜன்னலை நோக்கி ஓடினான். ஆனால்...அதே சமயம், அறையில் சிதறிக் கிடந்த கற்களில் ஒன்று அவன் காலைத் தடுக்கியது; தாக்கியது. மறுகணம் 'ஐயோ!' என்று அலறிக் கொண்டே கீழே சாய்ந்தான்.

'ஐயோ' என்று அலறிக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்தான் செல்வம். அவன் இருப்பது பாழடைந்த அறையல்ல; பங்களா அறைதான். 'ஐயோ! நான் கண்டதெல்லாம்... கனவா? நல்லவேளை...' என்று முணமுணத்தான். கையிலிருந்த புத்தகத்தை புரட்டினான். அது திருக்குறள்! அதிலே ஒரு பாடல் அவன் கண்ணில் பட்டது. அவனைப் பார்த்துச் சிரித்தது. "பைத்தியக்காரா!" என்று பரிகசித்தது.

தன்னுயிர்க்கு இன்னாமைதான்
அறிவான் என் கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்?

தனக்குத் துன்பம் தருபவை என்று ஒன்றைநினைக்கும் ஒருவன், அதே துன்பத்தை மற்ற உயிர்களுக்குச் செய்கிறானே, அது ஏன்?-இப்படிக் கேட்டது அந்தப் பாடல். செல்வம் வெட்கினான். மறுகணம் கிளிக்கூண்டைப்பார்த்தான். மூலையில் முடங்கி உட்கார்ந்திருந்தது கிளி. செல்வம் அதனிடம் ஓடினான். அவசர அவசரமாக கூண்டைத் திறந்தான். "போ! போ வெளியே போ! பறந்து போ!" என்று சொன்னான் கிளி'படபட' வென்று இறக்கைகளை அடித்துக் கொண்டது. 'கீ...கீ...' என்று கத்தியது; பறந்தது. அந்தக் 'கீ...கீ...' என்ற சப்தம் "விடுதலை! விடுதலை!!" என்பதைப்போல இருந்தது செல்வத்துக்கு. அவன் சிரித்தான்!

— சொர்ணம்

★

---

# வல்லூறின் நிலை எதிர்க்கும்

# தி. மு. க. கிளைகள் தேர்தல் பற்றிய அறிக்கை

தி. மு. கழகச் சட்டதிட்டங்கள் 97-வது பிரிவின்படி கீழ்க்கண்ட மாவட்டங்களிலுள்ள சிற்றூர்ப் பேரூர்க் கிளை (சிறிய-பெரிய பஞ்சாயத்து ஆட்சிப் பகுதி) — நகரக் கிளை (நகர மன்ற ஆட்சிப் பகுதி) உறுப்பினர்கள் தங்கள் தங்கள் செயற்குழுக்களையும் மாவட்டப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க 27—3—55 ஞாயிற்றுக்கிழமையைத் தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும் அல்லது புதிதாகக் கிளை துவக்கியிருந்தாலும் அப்படிப்பட்ட கிளைக் கழகங்களும் 27—3—55 ஞாயிறன்று கூடி செயற்குழுவை உறுதி செய்துகொண்டு, மாவட்டப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவோ உறுதிபடுத்திக்கொள்ளவோ வேண்டும்.

கழக உறுப்பினர்களாய் இருந்து வருபவர்கள் தங்கள் உறுப்பினர் நிலையை இப்பொழுது புதுப்பித்துக்கொள்ள வேண்டியதில்லை. 28—2—55-ஆம் நாளுக்கு முன் உறுப்பினராகி இருப்பவர்கள் மட்டுமே இந்தத் தேர்தலில் வாக்காளர்களாக இருக்க உரிமையுடையவராவர். உறுப்பினர் சேர்ப்பது இரண்டு திங்கள்களுக்கு நிறுத்திவைக்கப்படுகிறது. 1—3—55-ஆம் நாளுக்குமேல் புதிதாக உறுப்பினராகச் சேர்பவர்கள் இந்தத் தேர்தலில் கலந்துகொள்ளக் கூடாது. 1-3-55-க்குப் பிறகு அமைக்கப்பெறும் கிளைகள் இப்பொழுது பதிவு செய்துகொள்ளப்பட மாட்டா. புதிய பொதுக்குழு அமைந்ததற்குப் பிறகுதான் அவை கவனிக்கப்பெறும்.

கிளைக் கழகங்களெல்லாம் 27-3-55-ல் தேர்தல் நடத்தித், தேர்தலின் முடிவுகளைத் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பிவைக்கப்பெறும் "கிளைக் கழகப் பதிவுச் சீட்டி"ல் தெளிவாகக் குறித்து 31—3—55-ஆம் நாளுக்குள் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோரின் முகவரிகளைத் தெளிவாக அந்தச் சீட்டில் எழுதி அனுப்பவேண்டும்.

தேர்தலின் முடிவு குறிக்கப்பட்ட கிளைக் கழகப் பதிவுச் சீட்டு, தலைமை நிலையம் வந்து சேர்ந்தால்தான், ஒவ்வொரு கிளைக் கழகமும் தலைமைக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

27—3—55-ல் தேர்தல் நடத்தும் கிளைக் கழகம் மட்டுமே மாவட்டக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும். முன்பே தேர்தல் நடத்தியாகிவிட்டது என்று இருத்தல் கூடாது.

27—3—55-ல் கிளைக் கழகத் தேர்தல் நடத்தவேண்டிய மாவட்டங்கள்:

சென்னை, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், கோவை, தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, நாஞ்சில், கேரள-ஆந்திர-கருநாடகப் பகுதிகள்.

தேர்தலில் கடைப்பிடிக்கவேண்டிய விதிகள்:

1. ஒவ்வொரு சிற்றூரிலும் (சிறிய பஞ்சாயத்து ஊர்) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட சிற்றூர்க் கிளை ஒன்றுதான் இருக்கவேண்டும்.

2. ஒவ்வொரு பேரூரிலும் (பெரிய பஞ்சாயத்து ஊர்) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட பேரூர்க் கிளை ஒன்றுதான் இருக்கவேண்டும்.

3. ஒவ்வொரு நகரிலும் (நகராட்சிப் பகுதி) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட நகரக் கிளை ஒன்றுதான் இருக்கவேண்டும்.

4. சென்னையிலுள்ள ஒவ்வொரு வட்டத்திலும் 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட வட்டக் கிளை ஒன்றுதான் இருக்கவேண்டும்.

5. சிற்றூர்—பேரூர்—நகரம்-சென்னை வட்டம் ஆகிய கிளைகளின் தேர்தல்கள் நடைபெறும்போது, அந்தந்தக் கிளைகளின் செயலாளர்கள் குறிப்பிடும் ஓரிடத்தில் வந்து எல்லா உறுப்பினர்களும் கூடவேண்டும். (நகரங்களிலுள்ள வட்டாரங்கள் இப்பொழுது தேர்தல் நடத்தவேண்டியதில்லை. நகரக் கிளை தேர்தல்தான் இப்பொழுது நடைபெறவேண்டும். நகரிலுள்ள எல்லா உறுப்பினர்களும் நகரக் கிளைத் தேர்தலில் ஒருபடியாகக் கலந்துகொள்ளவேண்டும். நகரக் கிளை அமைந்த பிற்பாடு வசதியானபோது 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டு ஒவ்வொரு வட்டாரமும் நகரக் கிளைச் செயலாளருக்கு அறிவித்துவிட்டு, நகரக் கிளைச் செயற்குழுவின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டின் கீழும் ஒரு வட்டாரக் கிளையை அமைத்துக்கொண்டு இயங்கலாம்.)

6. ஒவ்வொரு கிளையும் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர்—ஆகியோரை அலுவலாளராகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

7. செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் உள்ளிட்ட செயற்குழு 11 பேருக்குக் குறையாமலும், 21 பேருக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

8. சிற்றூர்க் கிளை ஒரு பிரதிநிதியையும், பேரூர் கிளை ஒரு பிரதிநிதியையும், சென்னை வட்டக் கிளை இரண்டு பிரதிநிதிகளையும், நகரக் கிளை அந்தந்த நகரமக்கள் தொகையில் ஒவ்வொரு இருபதினாயிரம் மக்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி வீதமும் அந்தந்த மாவட்டக் கழகத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

9. தேர்தல் கிளைக் கழகத்தின் முன்னைய செயலாளராலேயே நடத்தப்படவேண்டும். முன்னைய செயலாளரே தேர்தலுக்கு நிற்பதாக இருந்தால், கூடியிருக்கும் பொது உறுப்பினர் கூட்டம், தம்மில் ஒருவரைத் தேர்தல் நடத்துபவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாவட்டக் கழகம் அனுப்பிவைக்கும் தேர்தல் ஆணையாளரின் தலைமையில்தான் வட்டக் கிளை தேர்தல் நடைபெறவேண்டும். பிற மாவட்டங்களில் அவசியப்பட்டால் குறிப்பிட்ட கிளைகளின் தேர்தல்களை நடத்திவைக்க மாவட்டச் செயலாளர், தேர்தல் ஆணையாளர்களை அனுப்பிவைக்கலாம்.

10. தேர்தல் நடைபெறும்போது வாக்குரிமை பற்றிய தகராறுகள் கிளம்புமேயானால், கூடும் கழக உறுப்பினர்கள், அவற்றைக் கூட்டத் தலைவரின் தீர்ப்புக்கு விட முயலல் வேண்டும். அவசியமானால் கூடியுள்ள பெரும்பான்மையோரின் வாக்குகளால் முடிவெடுக்க முயலலாம்.

11. தேர்தல் நாளுக்கு ஒரு வாரத்துக்கு முன்பே, கிளைச் செயலாளர், கழக உறுப்பினர்கள் அனைவரும் அறியும் வகையில் தேர்தல் நடைபெறும் செய்தியையும், தேர்தல் நடைபெறும் இடத்தையும் விளம்பரப்படுத்தி உறுப்பினர் கூட்டம் கூட்டவேண்டும்.

12. தேர்தல் பற்றிய தகராறு இருந்தால் மாவட்டக் கழகத்தின் மூலம், தலைமைக் கழகத்துக்கு விண்ணப்பம் செய்து நீதி கோரலாம். தலைமைக் கழகம் பிற்பாடு ஆய்ந்தறிந்து தீர்ப்பு கூறும். தேர்தல் நாளன்று தகராறு கிளப்பக்கூடாது.

"அறிவகம்"
இராயபுரம் ; சென்னை-13.
5—3—55.

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர்,

## கீழ்ப்பாக்கத்தில் பகுத்தறிவுப் பரிதி!

மதுரை வைத்தியநாத அய்யர்-ஆச்சாரியாரின் பிரதம சிஷ்யர்—நம்முடைய மாநாட்டுப் பந்தலை 'லங்காதகனம்' செய்து அந்த மகிழ்ச்சியிலே லயித்திருந்த 'அனுமந்தன்' சென்றகிழமை மறைந்துவிட்டாரல்லவா? அவருடைய சேவைகளைப் பாராட்டி, 'மதுரை மன்னனை இழந்தோம்' என்கிற தலைப்பில் மார்ச்-6 ந்தேதி கல்கி ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறது. அவரைப் பற்றி எழுதியுள்ள வாசகங்களில் ஒன்றை நம்மால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

"நெற்றியிலே நீறணிந்த திருமேனியைப் பார்த்தவர்களுக்கு (வைத்தியநாத அய்யர்) குறுகிய மனப்பான்மையுள்ள வைதீகரோ என்ற எண்ணம் எழும்"

வைத்தியநாதரின் குண விசேஷங்களையல்ல, நாம் ஆராய்வது!

நெற்றியிலே நீறணிந்த வைதீகர்கள் குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாம்—சொல்லாமற் சொல்லுகிறது. 'கல்கி' இதழ்!

அந்த 'குறுகிய மனப்பான்மை' யிலிருந்து மாறுபட்டவராம், 'மதுரை மன்னன்'!

பாம்பு விஷம் கக்குமாம்; ஆனால் இது நஞ்சு கக்காத தண்ணீர்ப் பாம்பாம்!

நாமும் இதைத்தான் அந்நாள் தொட்டு தெளிவுபடுத்தி வருகிறோம். குள்ள மனப்பான்மையினரின் 'பவிஷு' மறைக்கும் திரைதான் நெற்றியிலே படிந்திருக்கும் நீறு.

வெறிக்குணம் படைத்தவர்கள் விரித்திருக்கும் வலைதான் வைதீகக் கோலம்-

இப்படி நாம் சொல்லிய போதெல்லாம், கூரிய சொற்களை நம்மீது சொரிந்தவர்கள் இப்போது ஒப்புகிறார்கள்—உண்மை நிலை உணர்கிறார்கள்!

பகுத்தறிவுப் பரிதி கீழ்ப்பாக்கத்திலும் புகுந்து புத்தொளி பரப்புகிறது: மகிழ்ச்சிதான், நமக்கு!

# வெண்புறு முழக்கமே மார்ச் 20

11-03-55

# கடைசிப்பக்கம்

எழுமலை; வண்ணை

(?) சென்ற பொதுத் தேர்தலில் தி. மு. கழகம், கம்யூனிஸ்ட் கட்சியிடம் நிபந்தனை கேட்டதே; அது திராவிட நாட்டு விடுதலைக்கு ஆக்கம் தேடவா? அல்லது கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை வளைத்து எதிர்ப்பை அடக்க வேண்டுமென்ற உள் நோக்கத்திற்காகவா?

தி. மு. க. விடம் அத்தகைய உள்நோக்கம் எதுவுமில்லை. நாட்டு விடுதலைக்கு ஆக்கம் தேடவே தி. மு. கழகம் ஒப்பந்தத் திட்டத்தை வெளியிட்டது.

தமிழ்ப்பிரியன்; கல்லாவி

(?) புத்திசாலிக்கும், மூடனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

புத்திசாலி வழி காட்டுகிறான்; மூடன் அந்த திசையிலே நடக்கிறான்.

அங்கு; வேப்பேரி

(?) ஆந்திராவிலே கம்யூனிஸ்ட்கள் ஏன் தோற்றார்கள்!

தோற்றார்களா? யார் சொன்னது அப்படி? அவர்கள் அமோக வெற்றியடைந்து விடுவார்களென்று சென்ற வார 'ஜனசக்தி' எழுதியிருந்ததே; அதைப் படிக்கவில்லையா நீர்?

(?) பொதுத் தேர்தலில் நாகிரெட்டிகூட மண் கௌவிவிட்டாரே; ஏன் இந்த நிலை?

நாட்டுக்கேற்றபடி கொள்கையை மாற்றி அமைத்துக்கொள்ளாதவரை நாகிரெட்டி மட்டுமென்ன; மாசேதுங்சே இங்கு போட்டியிட்டாலும் மண்தான் கௌவவேண்டும்!

சுந்தரம்; மட்டக்களப்பு

(?) புதுவை நகரிலுள்ள திராவிடர் முன்னணி தி. மு. கழகத்தின் கிளையா?

இல்லை; இன்னும் அந்த ஸ்தாபனம் தி. மு. க.வால் அங்கிகரிக்கப்படவில்லை.

அ. சு. ஹை; அரகண்ட நல்லூர்

(?) கவர்னர் பதவி வகிப்பதற்கு என்ன தெரிந்திருக்கவேண்டும்?

ஆண்டு ஒன்றிற்கு பத்து லட்ச ரூபாய்களை சுருட்டிக்கொண்டு, அதே நேரத்தில், தான் ஒரு 'ஏழையர் நாட்டின் ஊழியன்' என்பதையும் விளம்பரப் படுத்திக் கொள்கிற அளவுக்கு நன்றாக நடிக்கத் வேண்டும்.

(?) கடவுளுக்குப்பலியிடப்படும் ஆடு சொர்க்கம் அடைகிறதா?

இந்த நம்பிக்கை இருந்தால், எத்தனையோ வைதீகப் பித்தர்கள் தட்சணை தராமல்-தவமிருக்காமல் குறுக்கு வழியில் சொர்க்கம் ஏகிட, வெட்டறிவாளுக்கு முன் கழுத்தை நீட்டியிருப்பார்களே!

(?) அறிவிற்கும், அழகிற்கும் உள்ள வித்யாசம் என்ன?

அறிவும், அது தரும் பலனும் என்றும் நிலைத்திருக்கும் வானம்; அழகு-தோன்றி மறையும் வானவில்!

துரை, முருகேசன்; காரமடை
இராசு; செந்துரை

(?) பேரூர் பொதுக்குழு கூட்டத்தில் அண்ணாவும், தம்பிகளும் ஆண்டவன் பாதங்களுக்கு அடியில் உட்கார்ந்து சாப்பிடுவதுபோல் படம் வெளியாகியிருக்கிறதே; இதுஅண்ணாவின் பிற்போக்கைத்தானே குறிக்கிறது?

அல்ல; அல்ல; அது கடவுளரின் முற்போக்கைத்தான் குறிக்கிறது. இல்லாவிட்டால் அன்று நெற்றிக் கண்ணைத் திறந்து நாத்திகர்களைச் சுட்டெரித்தவர்கள் இன்று பகுத்தறிவு பேசும் எங்களிடம் அப்படி சாத்விக முறையில் நெருங்கியிருக்கமாட்டார்களே!

'சம்மட்டி'; விருதுநகர்

(?) எண்ணற்ற தமிழ்க் கருவூலங்களை மூன்று ஊழிகள் அழித்துவிட்டன என்கிறார்களே, அந்த 'ஊழி' எப்படி இருக்கும்?

மேகங்கள் திரண்டு, உருண்டு, குமுறி, இடையறாது மழையைச் சொரிய, கடல்கள் ஆரவாரித்து, ஓங்கி, எழுந்து, புரண்டு, பெருகி, நாடுகளைத் தன்வாய் மடுத்து அழிப்பதே ஊழியாகும், அதனை பிரளயம் என்றும் கூறுப.

சொக்கன்; பாண்டலோயா

(?) 'பிரபவ', 'விபவ'—என்று துவங்கும் வருஷங்கள் எல்லாம் தமிழ் வருஷங்களா?

அந்த ஆண்டுப் பெயர்களெல்லாம் தமிழ்போலவா ஒலிக்கின்றன? கி. பி. 426-ல்தான் ஒரு ஆரிய அரசன் அந்த அறுபதாண்டுப் பெயர்களையும்உருவாக்கினான். அதற்கு முன்பு, அந்தந்த நாட்டு அரசர்கள் பெயரால், இந்த அரசனுடைய ஆட்சியில் இத்தனையாவது ஆண்டு என்றுதான் குறிப்பிட்டு வந்தார்கள்.

சங்கரன், பொன்மலை

(?) தொழிற் சங்கத்தில் தி. மு. கழகம் பங்குபெற வேண்டுமென்று பேரூர் பொதுக்குழு முடிவு செய்ததே—அதுபற்றிய சொள்கை விளக்கம் இன்னும் ஏன் தரப்படவில்லை?

விரைவில் திருச்சியிலே கூடப்போகும் மாநில மாநாடு இதுபற்றிய முடிவுகளை திட்டவட்டமாக உருவாக்கும்.

கண்ணன்; மயிலை

(? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் உயர்வைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

உயர்வைப் பற்றி என்ன சந்தேகம்? முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைவிட உயர்வான அமெரிக்கன் 'ஆர்ட்' காகிதத்தில்தான் அச்சிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது!

★

## கொள்கை வளருது கோபுரம் போலே!

### சென்னை

சென்னை மாவட்டதி. மு. கழக நிதிக்காக

**13-3-55**

ஞாயிறு காலை 9-மணிக்கு

கோகலே மண்டபத்தில்

**சிறப்புச் சொற்பொழிவு**

பேசுவோர் :

டி. கே. சீனிவாசன்
—ரஷ்யப்பாதை

ஏ. வி. பி. ஆசைத்தம்பி
—கடவுள் எங்கே ?

என். வி. நடராசன்
—சிதம்பர ரகசியம்

நன்கொடை அணா 8, 4.

★

### வேலூர்

கோட்டை வெளி

**13-3-55**

பேசுவோர் :

ஈ. வே. கி. சம்பத்
ஆர். எஸ். பாண்டியன்

★

### திருநெல்வேலி சந்திப்பு

ஆற்றங்கரை

13-3-55

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

★

### கீரமங்கலம்

(தி. மு. க. துவக்க விழா)

**17-3-55**

பழைய சினிமா கொட்டகை

பேசுவோர் ;

ஈ. வே. கி. சம்பத்
மணிமொழி
கே. அடைக்கலம்

★

### சேலம்

(செவ்வாய்ப் பேட்டை)

13-3-55

பேசுவோர் :

க. அன்பழகன்
சத்தியவாணிமுத்து

★

### புதூர்

**11—3—55**

பேசுவோர்:

என். வி. நடராசன்
ப. உ. சண்முகம்
கே. சுப்பிரமணியம்

